இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 135 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 9 – திங்கள்கிழமை 25 டிசம்பர் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 135 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 9 - Monday 25 December 2023 - Chennai 10 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.12.2023), தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, அண்ணா சாலை, சிம்சன் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

### அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில்

# கிறிஸ்துவ மக்களுக்கு என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 25-**

**கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில் கிறிஸ்துவ சமுதாய மக்கள் அனைவருக்கும் தன் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

“கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தவை.”

“நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதை உடனே செய். அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.”

என்பன போன்ற தனி மனிதரின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி நல்வாழ்வுக்கு வழிகாட்டும் போதனைகளை வழங்கிய புனிதர் இயேசுநாதர்! அவர் பிறந்த திருநாள் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 25 அன்று உலகமெங்கும் கிறிஸ்துமஸ் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.



கிறித்தவ சமயத்தைப் பரப்பிடத் தமிழ்நாடு வந்த தொண்டர்கள் பலர். அவர்களுள் தமிழ்மொழி மீது கொண்ட பற்றால், “தமிழ் மாணவன்” என்று தம் கல்லறையில் எழுதச் செய்த அறிஞர் ஜி.யு.போப், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் படைத்து, தமிழ் செம்மொழி எனப் பறைசாற்றிய அறிஞர் கால்டுவெல், சதுர் அகராதி தந்து, “தமிழ் அகராதியின் தந்தை” எனப் போற்றப்படும் வீரமாமுனிவர், தமிழ்நாட்டிற்கு அச்சு இயந்திரத்தை முதன்முதல் கொண்டுவந்து தமிழ்நூல்கள் அனைத்தும் அச்சு வடிவம் கொள்ளத் துணைபுரிந்த சீகன் பால்கு ஐயர் முதலான சான்றோர்கள் பலர் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் வியக்கத்தக்கவை. இதில் பல பெருமக்களுக்கெல்லாம் நன்றியுணர்வோடு, சிலைகள் நிறுவி மண்ணில் அவர்கள் புகழ் என்றும் நின்று நிலவச் செய்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மேலும், 2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல்,

* உபதேசியார் நல வாரியம்
* சிறுபான்மையினர் விடுதி மாணவ மாணவியர்க்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு
* கரூர், மதுரை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கிறிஸ்தவ உதவிச் சங்கம் கூடுதலாக துவங்கிட நிதி ஒதுக்கீடு
* ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செல்வதற்கு அருட் சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு
* தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகக் கடன்கள்

என நமது திராவிட மாடல் அரசின் சார்பில் கிறித்தவ மக்களுக்காக எண்ணற்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் மணிமகுடமாக, கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனச் சட்டப்பேரவையில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நான் தனித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளேன்.

அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில் கிறித்தவ சமுதாய மக்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு!

*கூடலூர், டிச. 25 -*

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகில் உள்ள வைகை அணை கடந்த மாதம் 10ந்தேதி 70 அடியை எட்டியது. இதனைதொடர்ந்து 11ந் தேதி முதல் 14ம் தேதி வரை சிவகங்கை மாவட்ட பூர்வீக பாசனத்திற்கு 413 மி.கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதன்பின்னர் மீண்டும் வடகிழக்குபருவமழை தீவிரமடைந்ததால் வைகை அணையின் நீர்மட்டம் இந்த மாதம் முழு கொள்ளளவை எட்டியது.

இதனையடுத்து கடந்த 16ந்தேதி முதல் 20ந்தேதி வரை ராமநாதபுரம் மாவட்ட வைகை பூர்வீக பாசனபகுதி 3க்கும் 1004 மி.கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வைகை அணையில் இருந்து ராமநாதபுரம் மாவட்ட மக்களின் வைகையாற்றின் வழியாக நேற்று காலை முதல் விநாடிக்கு 800 கனஅடிவீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

பின்னர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 200 கன அடியாக திறக்கப்பட்டது. அணையிலிருக்கும் தண்ணீரை பொறுத்து கிருதுமால் நதிக்கு 10 நாட்கள் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வைகை அணையில் இருந்து 58ம் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தி உசிலம்பட்டி பகுதி விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நேற்று முதல் வைகை அணையில் இருந்து 58ம் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

### வரலாறு காணாத அதி கனமழை! அரசின் போர்க்கால நடவடிக்கையால்

# தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை திரும்பியது!

*தூத்துக்குடி, டிச. 25 -*

வரலாறு காணாத அதி கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசின் போர்க்கால நடவடிக்கையால் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17, 18 ஆகிய தேதிகளில் அதிகனமழை பெய்தது.

இதன் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. பல குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால், மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான உணவு, போர்வை உள்ளிட்ட உதவிகளை மாவட்ட நிர்வாகம் செய்தது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசின் போர்க்கால நடவடிக்கைகளால், தூத்துக்குடி மாவட்டத்தில் மெல்ல மெல்ல இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது. கடந்த ஒரு வாரமாக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் களத்தில் இருந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிசெய்து வருகின்றனர்.

நிறுத்தப்பட்டிருந்த பேருந்து சேவை 2 நாட்களுக்கு முன் மீண்டும் தொடங்கியது. மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர் சாலை சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலையில் இருந்து திருச்செந்தூருக்கும் பேருந்து சேவை இயக்கப்பட்டது. தூத்துக்குடியின் முக்கிய சந்தையான வ.உ.சி சந்தையில் மக்களின் நடமாட்டம் மீண்டும் வழக்கமான நிலைக்கு திரும்பி உள்ளது.

**திருச்செந்தூர்!**

அதிகனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்ட திருச்செந்தூரிலும் அரசின் துரித நடவடிக்கையால் இயல்பு நிலை திரும்பியுள்ளது. 6 நாட்களுக்கு பிறகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்து வருகின்றனர்.

### மல்யுத்த வீரர், வீராங்கனைகளின் கடும் எதிர்ப்புக்கு பணிந்த ஒன்றிய அரசு!

# இந்திய மல்யுத்த கூட்டமைப்பு சஸ்பெண்ட்!

## ஒன்றிய அரசு உத்தரவு!

*புதுடெல்லி, டிச. 25 -*

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் மீது முன்னணி மல்யுத்த வீராங்கனைகள் பலரும் கடுமையான பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், அவருக்கு நெருக்கமான சஞ்சய் சிங் , மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னணி மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக், மல்யுத்தத்தை விட்டே விலகுவதாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, தனக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதை திருப்பிக்கொடுப்பதாக அறிவித்தார். சாக்ஷி மாலிக்கிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மல்யுத்த வீரர் விரேந்தர் சிங்கும் பத்மஸ்ரீ விருதை திரும்பக் கொடுப்பதாக அறிவித்துள்ளார். இந்நிலையில், இந்திய மல்யுத்த கூட்டமைப்பை ஒன்றிய விளையாட்டு அமைச்சகம் சஸ்பெண்ட் செய்துள்ளது.

இவ்வாண்டு இறுதியில் ஜூனியர் மல்யுத்தப் போட்டிகள் உத்தரப்பிரதேசத்தின் கோண்டா மாவட்டத்தில் நடைபெறும் என மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவர் சஞ்சய் சிங் அறிவித்திருந்தார். எந்த விதிமுறையையும் பின்பற்றாமல், அவசரகதியில் இந்த அறிவிப்பு வெளியிட்டதால்தான் இந்த நடவடிக்கை என ஒன்றிய விளையாட்டு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இருப்பினும், மல்யுத்த வீரர், வீராங்கனைகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்தே இந்திய மல்யுத்த கூட்டமைப்பை ஒன்றிய அரசு சஸ்பெண்ட் செய்துள்ளதாகவே தகவல்கள் வெளியாகி உள்ளன.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25-12-2023

# எது அவமானம்?

**இந்திய நாட்டின் நாடாளுமன்றத்தில் இருந்து ஒரே நேரத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்தது ஜனநாயகத்துக்கு அவமானம் இல்லையாம். மாநிலங்களவை சபாநாயகர் ஜெகதீப் தன்கரைப் போல மிமிக்ரி செய்து விட்டார்களாம். ஏதோ இந்தியாவே அவமானப்பட்டதைப் போல பிரதமரும், குடியரசுத் தலைவரும் குசலம் விசாரிப்பதும், மக்களவை சபாநாயகரும் - மாநிலங்களவை சபாநாயகரும் சந்தித்துக் கொள்வதும் குணச்சித்திரக் காட்சிகளாக அமைந்திருக்கின்றன.**

நாடாளுமன்றத்துக்குள் புகைக் குண்டு வீசப்பட்டது. இது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதுவே விஷ வாயு குண்டாக இருந்திருந்தால் பல உறுப்பினர்களின் நிலைமை என்ன ஆகி இருக்கும் என்றே கணிக்க முடியாது. இது தொடர்பாக பிரதமரோ, உள்துறை அமைச்சரோ அவைக்கு வந்து பதில் அளிக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் ஒற்றைக் கோரிக்கை. அதைக் கூட ஆளும் பா.ஜ.க. ஏற்கவில்லை. புகைக் குண்டு வீசப்பட்ட நாடாளுமன்றத்துக்கு வரவில்லை பிரதமர். பதிலளிக்க வில்லை உள்துறை அமைச்சர்.

உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயக உரிமை ஆகும். அதைக் கூட பயன்படுத்த மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை சபாநாயகர் ஜெகதீப் தன்கரும் அனுமதிக்கவில்லை. தொடர்ச்சியான முழக்கத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினார்கள். எனவே, கொத்துக் கொத்தாக உறுப்பினர்களை இடை நீக்கம் செய்யத் தொடங்கினார்கள் பேரவைத் தலைவர்கள். 146 உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இப்படி இடை நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களில் சிலர் நாடாளுமன்றத்தின் நுழைவாயில் படியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதுவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமை ஆகும். அப்போது திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான கல்யாண் பானர்ஜி, துணை ஜனாதிபதியும் மாநிலங்களவை சபாநாயகருமான தன்கரைப் போல மிமிக்ரி செய்தாராம். இது தன்கர் கவனத்துக்குச் சென்றது. அவர் மாநிலங்களவையில் தனது கண்டனத்தை தெரிவித்து இருக்கிறார்.

உடனே துணை ஜனாதிபதியை தொலைபேசியில் அழைத்து பேசினாராம் பிரதமர் நரேந்திரமோடி. “பிரதமர் மோடி என்னை போனில் அழைத்து பேசினார். மாண்புமிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் செய்த கேவலமான செயல்கள் குறித்து வேதனையை வெளிப்படுத்தினார். அதுவும் புனிதமான நாடாளுமன்ற வளாகத்தில் நடப்பது வருத்தம் அளிப்பதாகச் சொன்னார். 20 ஆண்டுகளாக தான் இது போன்ற அவமானங்களை அனுபவித்து வருவதாகவும் சொன்னார். துணை ஜனாதிபதிக்கே இப்படி நடக்கலாமா என்றும் சொன்னார்” என்று பதிவிட்டுள்ளார் துணை ஜனாதிபதி.

“மிமிக்ரி ஒன்றும் தடை செய்யப்பட்டதல்ல. இதன் மூலமாக உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை திசை திருப்பப் பார்க்கிறார்கள். துணை ஜனாதிபதி உள்பட யாரையும் கேலி செய்யும் எண்ணம் எனக்கு இல்லை” என்று சொல்லிவிட்டார் மிமிக்ரி செய்த எம்.பி. கல்யாண் பானர்ஜி. அதன் பிறகும் இதை பெரிது ஆக்கினார்கள்.

புகைக் குண்டு வீசியவருக்கு நாடாளுமன்ற நுழைவு அனுமதிச் சீட்டு கொடுத்தவர் பா.ஜ.க. எம்.பி. அதனைத் திசை திருப்பவே இதைச் செய்கிறார்கள்.

**அதிலும் குறிப்பாக 20 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திரமோடி என்ன அவமானங்களைச் சந்தித்து வருகிறார்? குஜராத் படுகொலையைச் சொல்கிறாரா? அது யாருக்கு, யாரால் இழைக்கப்பட்ட அவமானம்? இந்திய நாட்டின் பன்முகத் தன்மைக்கும், மனித உரிமைகளுக்கும், மனசாட்சிக்கும் இழைக்கப்பட்ட துரோகத்துக்கு யார் காரணம்? பொறுப்பேற்க வேண்டியவர் யார்? அது என்ன அவதூறு குற்றச்சாட்டா? அது நடக்க யார் காரணம்? யாருடைய ஆட்சியில் நடந்தது? யார் கொடுத்த துணிச்சலில் நடந்தது? யார் இதுவரை தண்டிக்கப்பட்டுள்ளார்கள்? பொத்தாம் பொதுவாக, ‘20 ஆண்டுகளாக நான் அவமானங்களைச் சந்தித்து வருகிறேன்’ என்பதன் மூலமாக பிரதமர் நரேந்திர மோடி யாரிடம் கழிவிரக்கம் தேட விரும்புகிறார்?**

மக்களவையில் எழுந்து நின்று தன்கருக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்து இருக்கிறார்கள் பா.ஜ.க. எம்.பி.கள். இது அடுத்தடுத்து நடந்த நாடகங்கள் ஆகும்.

2018 ஆம் ஆண்டு நடந்ததை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ளார். ராகுல் காந்தி சபையில் பேசிவிட்டு, பிரதமரின் இருக்கைக்குச் சென்று அவரைக் கட்டிப் பிடித்தார். அதன்பிறகு பேசிய பிரதமர் அவர்கள், ராகுல்காந்தியைப் போல மிமிக்ரி செய்ததை சுட்டிக் காட்டி இருந்தார். ‘யார் யாரை கிண்டல் செய்து நடித்துக் காண்பிக்கின்றனர். அதுவும் மக்களவைக்குள் நடித்துக் காட்டியதை நினைவுகூறுங்கள்’ என்று சொல்லி அந்த வீடியோவை வெளியிட்டுள்ளார் ஜெயராம் ரமேஷ். முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் ஹமீது அன்சாரியை, பிரதமர் மோடி மிமிக்ரி செய்யும் வீடியோவையும் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டு இருக்கிறார்.

**ராகுல்காந்தியை ‘பப்பு’ என்று சொல்லி அதை சைகை மூலம் மிமிக்ரி செய்து கிண்டலடித்தார் பிரதமர் நரேந்திரமோடி. அதனை காங்கிரஸ் கட்சி வெளியிட்டு விமர்சித்துள்ளது. “பிரதமர் மோடி கூட எதிர்க்கட்சித் தலைவர்களை மிமிக்ரி செய்துள்ளார். அவர் அவ்வாறு செய்வதை எல்லோரும் சீரியஸாக எடுக்காமல் நகைச்சுவையாகவே எடுத்துக் கொண்டனர். இப்போது என் விஷயத்தில் சீரியஸாக எடுத்துக் கொண்டால் நான் பொறுப்பல்ல” என்றும் கல்யாண் பானர்ஜி சொல்லி இருக்கிறார்.**

**இந்திய நாட்டின் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து புகைக் குண்டு வீசப்பட்டது கேவலமில்லையா? இந்திய நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பது அவமான மில்லையா? ஒட்டுமொத்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இழைக்கப்பட்ட உரிமை மீறல் அல்லவா இது? பா.ஜ.க. உறுப்பினர்களுக்கும் சேர்த்தே தான் பா.ஜ.க. நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு இல்லையா? இதைக் கேள்வி கேட்டால், அனைவரையும் டிஸ்மிஸ் செய்து விடுவோம் என்பது தான் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு கடைப்பிடிக்கும் நெறிமுறையா? அனைத்து உறுப்பினர்களின் பாதுகாப்பும், ஒரே ஒரு உறுப்பினரின் மிமிக்ரியும் ஒன்றா?**



நெல்லை மாவட்டம், தருவை பாலக்கால் கால்வாய் உடைப்பினால் சேதமடைந்த விவசாய நிலங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா, நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், வேளாண்மை ஆணையர் முனைவர் சுப்பிரமணியன், தோட்டக்கலை இயக்குனர் பிருந்தாதேவி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், நகரச் செயலாளர் கணேசன் உள்பட அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரட்டைப் பேரிடரிலிருந்து மீண்டெழ ஒன்றிய அரசு உதவும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை - தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிரதமர் நரேந்திர மோடி உறுதி!

புதுடெல்லி, டிச.25-

“தமிழ்நாட்டில் ஏற்பட்ட இரட்டைப் பேரிடரிலிருந்து மீண்டெழ ஒன்றிய அரசு உதவும்!” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உறுதி அளித்தார்.

இவ்வுரையாடல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-





**மிக்ஜாம் புயல் பாதிப்பு ஏற்பட்ட உடனே, தென் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத பெருவெள்ளம் குறித்துக் கேட்டறிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் என்னை அழைத்திருந்தார்.**

**கடும் நிதி நெருக்கடிக்கிடையே மாநில அரசு மேற்கொண்டு வரும் பெரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவரிடம் விளக்கிக் கூறி, ஒன்றிய அரசிடம் இருந்து உடனடி நிதி உதவியைக் கோரினேன்.**

**இந்த இரட்டைப் பேரிடரில் இருந்து தமிழ்நாடு மீண்டெழ ஒன்றிய அரசு உதவும் என உறுதியளித்த பிரதமர் அவர்கள், வெள்ளப் பாதிப்பை மதிப்பிட ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களை நியமித்திருப்பதாகவும் தெரிவித்தார்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நெல்லை - நாங்குநேரி - களக்காடு பகுதிகளில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணி!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டு ஆய்வு!

நெல்லை, டிச.25-

நெல்லை மாவட்டம் நாங்குநேரி மற்றும் களக்காடு பகுதியில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகள் மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெல்லை மாவட்டத்தில் பெய்துள்ள கனமழையினால் பல்வேறு இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களை கண்காணிப்பதற்கு கண்காணிப்பு அலுவலர்கள் நிய மிக்கப்பட்டு, கண்காணிப்பு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று கண்காணித்து வருகிறார்கள். ஒவ்வொரு துறைகள் மூலம் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

நெல்லை நாங்குநேரி மறுகால்குறிச்சி ஊராட்சி வில்வராயன் குளத்தில் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்பினை தற்காலிகமாக சரி செய்யப்பட்டுள்ளதை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். தொடர்ந்து பெரிய குளம் தண்ணீர் நிரம்பி கரையோரமாக தண்ணீர் வெளியேறியது. இதனை தற்காலிகமாக மண்நிரப்பி சீர் செய்துள்ளது. நிரந்தர மாக அடைப்பதற்கு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கீழப்புத்தனேரி செல்லும் சாலை அதிகமாக மழை வெள்ளம் ஏற்பட்டதால் அரிப்பு ஏற்பட்டு துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பாலத்தை பொதுமக்களின் போக்குவரத்திற்காக தற்சமயம் தற்காலிகமாக பாலம் அமைத்து கொடுக்க வேண்டும். மேலும் வரும் காலங்களில் மழை தண்ணீர் வந்தாலும் தடையின்றி செல்லும் வகையில் ஆய்வு செய்து சாலை அமைக்க வேண்டும் என்றார். பாரங்காடு பகுதியில் வீடு மழையில் இடிந்துள்ளது.

இந்த வீட்டினை பார்வையிட்டு கணக்கெடுப்பு செய்யப்பட்டு உரிய நிவாரண வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

கோதைச்சேரியில் மழை வெள்ளத்தினால் 5000 வாழைப் பயிர்கள் சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டு ள்ளதையும்,ஏர்வாடி பகுதியில் உள்ள வாய்க்கால் மற்றும் ஏர்வாடி வணிகர்கள் தெருவில் பிரிக்குளம் தரை உடைந்து வீடுகளில் தண்ணீர் சென்றுள்ளதை பார்வையிட்டு,தண்ணீர் வடிவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

நெல்லை மாவட்டத்தில் பெய்துள்ள கன மழை காரணமாக பல்வேறு பகுதிகள் பாதிப்படைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் விவசாயம் முழுமையாக பாதிப்படைந்துள்ளது. நாங்குநேரிக்கு உட்பட்ட பகுதியில் ஆய்வு செய்த போது மழை வெள்ளத்தினால் குளங்கள் சேதம் அடைந்து தண்ணீர் வெளியேறி சாலை பழுதடைந்துள்ளது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தினால் வாழைப்பயிர்கள் மற்றும் நெற்பயிர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது.தனிநபர் வீடுகளும் சேதம் அடைந்துள்ளன. இப்பகுதியில் சேதம் அடைந்துள்ளவை கணக்கெடுப்பு உரிய நிவாரணம் தமிழ்நாடு அரசு மூலம் பெற்று தருவதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கணக்கெடுக்கும் பணிகள் துரிதமாக நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

தொடர்ந்து நம்பியாற்று பாலம், கௌதம நதி,தம்பி தோப்பு, குடில் தெருவில் மழை வெள்ளத்தினால் பாலம் உடைந்த இடம், பத்தமனேரி உப்பாத்து பாலம், சிங்கிகுளம் ஆகிய இடங்களை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், ஒன்றியச் செயலாளர்கள் சுடலைக்கண்ணு, செல்வகருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, களக்காடு நகர்மன்றத் தலைவர் சாந்தி சுபாஷ், துணைத் தலைவர் ராஜன், ஏர்வாடி பேரூராட்சி தலைவர் தசிலிமா அயூப்கான் வட்டாட்சியர் விஜய் ஆனந்த், செயல் அலுவலர் சாஜன்மேதிக் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாவட்டம், நாங்குநேரி, காரங்காடு பகுதியில் மழை வெள்ளத்தினால் வீடு இடிந்துள்ளதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல், ஒன்றியச் செயலாளர் சுடலைக்கண்ணு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட அரசு அலுவலர்கள், கழகத்தினர் பலர் உள்ளனர்.

"வீறுகொண்டு எழுந்த நாம் ஒருபோதும் வீழ மாட்டோம்!" என

# தந்தை பெரியார் நினைவு நாளில் சூளுரைத்து வீணர்களை வீழ்த்துவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 25- தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**



பண்பாட்டு ரீதியாக ஒடுக்கப்பட்டு, அடையாளங்கள் சிதைக்கப்பட்ட தமிழினத்தின் சுயமரியாதையைத் தட்டியெழுப்பி, சமத்துவ நெறியே தமிழர் நெறி எனப் பகுத்தறிவுப் பாதையில் நம் மையெல்லாம் நடைபோடச் செய்த தந்தை பெரியாரின் புகழைப் போற்றுவோம்!

"கணந்தோறும் இப்பெரிய தமிழ்நாடு எதிர்பார்க்கும் தலைவர் பெரியார்" என்று பாவேந்தர் பாடியதைக் காலந்தோறும் முழங்குவோம்! வீறுகொண்டு எழுந்த நாம் ஒருபோதும் வீழமாட்டோம் எனச் சூளுரைத்து வீணர்களை வீழ்த்துவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தென் மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக பாதிப்புக்குள்ளான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும் நீரினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமென்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரூ.20.16 இலட்சம் செலவில் 40 இலட்சம் குளோரின் மாத்திரைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளது. பொதுமக்களுக்கு குளோரின் மாத்திரைகளை விநியோகம் செய்யும் பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (24.12.2023) ஏரல் பேரூராட்சிப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 10 குளோரின் மாத்திரைகளை பொதுமக்களிடம் வழங்கி, குளோரின் மாத்திரையை பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத்தார். இதில் அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் 8 ஆண்டுகளில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களின்போது

# அரசு கேட்டது ரூ.1,27,655.80 கோடி! கிடைத்தது 5,884.49 கோடி மட்டுமே!

## அதாவது 4.61 சதவிகிதம் தான்! கண்டு கொள்ளாத ஒன்றிய அரசு!

சென்னை, டிச. 25

தமிழ்நாட்டில் கடந்த 8 ஆண்டுகளில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களின் போது சீரமைப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்திற்காக தமிழ்நாடு அரசு கேட்டது ரூ.1,27,655.80 கோடி. ஆனால், கிடைத்தது வெறும் 4.61 சதவீதம், அதாவது ரூ.5,884.49 கோடி மட்டுமே என்ற பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரை கடந்த 8 ஆண்டுகளில் மழை, புயல் என்று பல்வேறு இயற்கை பேரிடர்கள் வந்து போய் உள்ளது. ஒவ்வொரு இயற்கை பேரிடரின் போதும் பல்வேறு உயிரிழப்புகளும், பொருளாதார இழப்புகளும் ஏற்பட்டது. அவற்றை ஒன்றிய அரசு கண்டுகொள்ளவேயில்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் மீது பாராமுகமாக இருந்து வருகிறது.

ஏனெனில் சென்னையில் 2015ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் தொடங்கி 2022-ல் ஏற்பட்ட கன மழை, பெரு வெள்ளம் வரை தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கேட்ட நிதியில், ஒன்றிய அரசு கொடுத்தது வெறும் 4.61 சதவீதம் நிதி மட்டும்தான். உதாரணத்திற்கு கடந்த 2015-16ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் போது ஏராளமான வீடுகள் தண்ணீரில் மூழ்கியது. லட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர். 200க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பாதிப்புகளை ஒன்றிய அரசு அதிகாரிகள் குழு பார்வையிட்டு சென்றது. அந்த வெள்ளத்தின் போது தமிழ்நாடு அரசு சார்பில் தற்காலிக நிவாரணமாக ரூ.7,959.93 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்காக ரூ.17,952.52 கோடி என மொத்தம் ரூ.25,912.45 கோடியை வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டது.

ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கியதோ ரூ.1,737.65 கோடி. 2016-2017ல் ஏற்பட்ட பெரும் வறட்சியின் போது தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.39,565 கோடி கேட்கப்பட்டது. ஆனால், வெறும் 1,748.28 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதே போல 2016—2017-ல் ஏற்பட்ட வர்தா புயலின் போது தற்காலிக நிவாரணமாக ரூ.1972 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ.20,600.37 கோடி என மொத்தம் ரூ.22,573.26 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கியது ரூ.266.17 கோடி. 2017-2018ல் ஏற்பட்ட கன மழை, ஒகி புயலின் போது தமிழ்நாடு அரசு சார்பில் தற்காலிக நிவாரணமாக ரூ.876 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்காக ரூ.8,426 கோடி என மொத்தம் 9,302 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ரூ.133 கோடி மட்டுமே ஒதுக்கியது.

2018-19ல் ஏற்பட்ட கஜா புயலின் போது தற்காலிக நிவாரணமாக ரூ.2,709 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்காக ரூ.5,190.17 கோடி என ரூ.17,899.17 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கியது ரூ.1,146.12 கோடி மட்டுமே. இதே போல 2020-21ல் ஏற்பட்ட நிவர் புயலின் போது தற்காலிக நிவாரணமாக ரூ.650.10 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ.3,108.55 கோடி என ரூ.3,758.65 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒதுக்கப்பட்டது ரூ.63.14 கோடி மட்டுமே. புரவி புயலின் போது தற்காலிக நிவாரணமாக ரூ.485 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்காக ரூ.1029 கோடி என மொத்தம் ரூ.1,514 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கியது ரூ.223.77 கோடி மட்டுமே.

### தற்காலிக நிவாரணம்!

ஜனவரியில் ஏற்பட்ட கனமழையின் போது தற்காலிக நிவாரணமாக ரூ.734.49 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ.166 கோடி என மொத்தம் ரூ.900.82 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கியது 213.51 கோடி மட்டுமே. இதே போல 2021-22ல் ஏற்பட்ட கன மழை மற்றும் வெள்ளத்தின் போது முதல் முன்மொழிவாக ரூ.549 கோடி தற்காலிக நிவாரணமாகவும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ.2,079.66 கோடி என மொத்தம் 2629 கோடி கேட்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகை ரூ.352.85 கோடி தான்.

2 ஆம் முன்மொழிவாக தற்காலிக நிவாரணத்துக்கு ரூ.521.29 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ.1475.21 கோடி என மொத்தம் ரூ.1996.50 கோடியும், 3ம் முன்மொழிவாக தற்காலிக நிவாரணமாக ரூ.439.91 கோடியும், நீண்ட கால சீரமைப்புக்கு ரூ. 1,164.75 கோடி என மொத்தம் ரூ.1,604.66 கோடியும் ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டது. அதாவது, 2015 முதல் பேரிடரால் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாக சீரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு கோரிய மொத்த தொகை ரூ.1,27,655.80 கோடி.

### தமிழ்நாட்டின் மீது பாராமுகம்!

ஆனால் ஒன்றிய அரசால் ரூ.5,884.49 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய தொகையில் 4.61 விழுக்காடு மட்டுமே. இதில் இருந்து ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது பாராமுகமாக இருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

அதே போல ஒன்றிய அரசின் நிதிக்குழுவின் பரிந்துரையின் படி மாநிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாநில பேரிடர் நிவாரண நிதியின் (SDRF) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு முறையே 75% மற்றும் 25% ஆகும்.

இந்த மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 75% ஒன்றிய அரசு இரண்டு தவணைகளில் வழங்குகிறது. ஒன்றிய அரசிடமிருந்து மாநில பேரிடர் நிவாரண நிதியின் 75% பங்கு வரப்பெற்ற உடன், மாநில அரசு தனது பங்கான 25%ஐ சேர்த்து, மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு ஒதுக்கீடு செய்கிறது. மாநிலங்களில் ஏற்படும் பேரிடர்களினால் ஆன சேதங்களை சீரமைக்க மாநில பேரிடர் நிவாரண நிதி போதுமானதாக இல்லாத நிலையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) நிதி ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசுக்கு மாநில அரசால் கோரிக்கை அளிக்கப்படுகிறது.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில், ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) நிதி ஒதுக்கீடு செய்கிறது. அவ்வாறு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை முழுவதும் ஒன்றிய அரசை சார்ந்தது ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ஏதும் இல்லை. ஆனால், சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தையும், தற்போது தென்மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளத்தையும் இவ்வாறு கடும் பேரிடர்களாக அறிவித்து NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்து இருந்தார்.

பிரதமர் மோடியை சந்தித்த போதும் இதை வலியுறுத்தி மனுவாகவும் கொடுத்திருந்தார். ஆனால், இன்று வரை இந்த இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை. NDRFல் இருந்து இதுவரை தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி எதையும் ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2015 முதல் பேரிடரால் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாக சீரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு கோரிய மொத்த தொகை ரூ.1,27,655.80 கோடி. ஆனால் ஒன்றிய அரசால் ரூ.5,884.49 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய தொகையில் 4.61 விழுக்காடு மட்டுமே. இதில் இருந்து ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது பாராமுகமாக இருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தையும், தற்போது தென்மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளத்தையும் கடும் பேரிடர்களாக அறிவித்து NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்து இருந்தார். பிரதமர் மோடியை சந்தித்த போதும் இதை வலியுறுத்தி மனுவாகவும் கொடுத்திருந்தார்.

இன்று வரை இந்த இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை. NDRFல் இருந்து இதுவரை தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி எதையும் ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை.

ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# இராயபுரம் 50-வது வார்டில் 3000 பேருக்கு நல உதவிகள் வழங்கல்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - தா.இளைய அருணா பங்கேற்பு!

சென்னை, டிச. 25 -

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டார்களுக்கு வார்டுகள் தோறும் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி நல உதவிகள் வழங்கி வருகிறார். அதன் தொடர்ச்சியாக நேற்று 50 -வது வார்டு பனைமரத் தொட்டி பகுதியில் 3000 பேருக்கு நல உதவிகள் வழங்கினார். இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் இளையா அருணா ஆகியோர் பங்கேற்று பொதுமக்களுக்கு வழங்கினர்.

இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் சட்டமன்ற தொகுதி 50 வது வார்டு பனைமரத் தொட்டி பகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட 3000 பேருக்கு நிவாரணப் பொருட்கள், நலத்திட்ட உதவிகளை, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் .தா.இளைய அருணா ஆகியோர் பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கினர்.

இந்நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து அணிகள் சார்ந்த கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர் .

மாமன்ற முன்னாள் உறுப்பினர் என். கவிதா நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா - 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## நா.சந்திரபாபு, புழல் எம்.நாராயணன் வழங்கினர்! கே. கருணாகரன், சி.மூர்த்தி, எஸ்.பாலாஜி முன்னிலை!

சென்னை, டிச.25-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் வட பெரும்பாக்கம் பகுதியில் உள்ள மாநகராட்சி சமுதாய கூடத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா நடைபெற்றது.

முன்னாள் மாமன்ற உறுப்பினர் என்.கவிதா நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும் தாய்மார்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

500க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு புடவை, ஐந்து கிலோ அரிசி, உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாதவரம் தொகுதி பார்வையாளர் நா. சந்திரபாபு மற்றும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆகியோர் வழங்கினார்.

மேலும் இந்து, கிறிஸ்து மற்றும் முஸ்லிம் கிராமப் பெரியவர்கள் முன்னிலையில் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு கேக் வெட்டி பொதுமக்களுக்கு ஊட்டி மகிழ்ந்தார்கள்

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், பகுதி பிரதிநிதிகள் சி, மூர்த்தி, துணை செயலாளர் சி. பாலாஜி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகபிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சி.அருணாசலம், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ் உதயகுமார், தீயம்பாக்கம் ஜான்சன் சுதர்சன் வில்சன் பூபாலன் வடபெரும்பாக்கம் டாக்டர் எம். மைக்கேல், பி. செந்தில், எம். கோவிந்தன், ஜே. இளையபெருமாள். ரவீந்தர், டி.மாதவன், டி. பூபாலன், மாத்தூர் ஜி .ராஜேஷ், கண்ணன், முகமது முஸ்தபா, நெடுஞ்செழியன், கொசப்பூர் ஜி. கார்த்திக், வி. சுமிர், ஜி. தினகரன், ஜி. முனுசாமி, அரியலூர் வினோத், ராஜ்குமார், நாகராஜ், சின்னத்தோப்பு ஜி. முனிவேல், ஜி. செல்வம், நாகராஜ், ராஜ்குமார், எம் .என். தளபதி, சாந்தகுமார், இனியவன், சுரேஷ், ஜி. சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இறுதியாக மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறினார்.

# தூத்துக்குடி சுங்கச்சாவடிகளில் டிச.31ஆம் தேதி வரை வாகனங்களுக்கு கட்டணம் விலக்கு!

தூத்துக்குடி, டிச.25-

அதி கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுங்கச்சாவடிகளில் டிச.31ஆம் தேதி வரை வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி தெரிவித்துள்ளார். அதி கனமழையால் மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ கத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாவட்டத்திற்கு தன்னார்வலர்கள், பொதுநல அமைப்புகள் நிவாரண பொருள்கள் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண பொருள்களை வாகனங்களில் சிரமமின்றி கொண்டு செல்வதற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுங்கச்சாவடிகளுக்கு டிச.31-ஆம் தேதி வரை அனைத்து வாகனங்களுக்கும் சுங்க கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டண விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளார்.

பத்திரிகையாளர் - ஊடகவியலாளர்களுக்கு நிவாரண உதவிகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இதயம் நிறைந்த நன்றி!

## சென்னை பத்திரிகையாளர் மன்றம் அறிக்கை!

சென்னை, டிச.25-

தாயுள்ளம், தயாள உள்ளம் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உறுதுணையாக நின்ற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோருக்கு பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சார்பில் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை பத்திரிகையாளர் மன்ற இணைச் செயலாளர் பாரதி தமிழன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னையில் மிக்ஜாம் புயல் ,தொடர் பெருமழை என இயற்கை பேரிடரில் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் ஊடகவியாளர்களுக்கு நிவாரண உதவிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

கோரிக்கை கிடைத்த உடனே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாயுள்ளம் தயாள உள்ளம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அளவற்ற அன்பு, அதை செயலாக்க மாபெரும் வகையில் உறுதுணையாக நின்ற இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோரின் பேருதவியினால் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி (23.12.2023) சனிக்கிழமையன்று சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

### "ஏழையில் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" பேறறிஞர் அண்ணா!

500 பத்திரிகை ஊடக நண்பர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிதி, 26 கிலோ உயர்தர அரிசி, தரமான BRANDED Rain Coat, மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு என்று கிட்டத்தட்ட ஒவ்வொருவருக்கும் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நிவாரண உதவிகளை செய்து வரும் கிறிஸ்துமஸ், புத்தாண்டுக் கொண்டாட்ட மனநிலையை இன்றைக்கே ஏற்படுத்தியது, பெரும் மகிழ்ச்சியை நிறைவைத் தந்துள்ளது.

மேலும் நிவாரண உதவிகள் பெறுவதில் விடுபட்டவர்களுக்கும் கூட உரிய நிவாரண உதவிகள் வழங்கிட உதவுகிறேன் என்று தனது உரையில் மிகப் பெரிய அன்பை ஆதரவை அள்ளிக் கொடுத்து சென்றார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற முக்கிய காரணமாக உறுதுணையாக நின்ற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் அவருடன் உதவிகரமாக இருந்த நண்பர்களுக்கும், விழாவில் கலந்து கொண்ட சென்னை பெரு நகர மேயர் ஆர்.பிரியா மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அத்தனைப் பேருக்கும் சென்னை பத்திரிகையாளர் மன்றம் சார்பில் இதயம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிவாரண உதவிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, உதவியாய் இருந்த, பல்வேறு வகைகளில் ஆக்கமும் ஊக்கமும் தந்து இந்த அறப்பணியில் ஈடுபடுத்திக்கொண்ட அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வாறு பாரதிதமிழன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



வடசென்னை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 லட்சம் மதிப்பில் வார்டு 53 மண்டலம் 5 சீனிவாசபுரம் 2 வது தெரு கொருக்குப்பேட்டையில் உள்ள பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி அடிக்கல் நாட்டு விழாவில் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா எம்.சி., ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, ராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வா.பே.சுரேஷ், 53வது மாமன்ற உறுப்பினர் திருமதி. பா.வேளாங்கண்ணி, zone 5 சேர்மன் ஸ்ரீராமுலு 53 வட்ட கழக செயலாளர் பாலா லட்சுமணன், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து அணிகள் சார்ந்த கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 50வது நினைவு நாளை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அவரது திருஉருவப் படத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மலர் தூவி வணங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், வட்டச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

# நெல்லையில் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் சீரமைப்புப் பணி!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

நெல்லை, டிச.25-

தென் மாவட்டங்களான திருநெல்வேலி,தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17.12 .2003 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த கனமழையினால் விவசாய நிலங்கள்,பயிர்கள் உள்ளிட்டவை பெரிதும் சேதம் அடைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க அதிகன மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகளை அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பொதுமக்களுக்கு வேண்டிய உதவிகளையும்,நிவாரண பொருட்களையும் வழங்கி வருகின்றனர்.

அதன்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தூத்துக்குடி மாவட்டத்தில் அதி கனமழையினால் பாதிக்கப்பட்ட உவரி,ஏரல், திருவைகுண்டம் ஆகிய பகுதிகளில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் நெல்லை மாவட்டம் தருவை பாலக்கால் கால்வாய் உடைப்பினால் சேதம் அடைந்த விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் வேளாண்மை ஆணையாளர் முனைவர் சு ப் பி ர ம ணியன்,தோட்டக்கலை இயக்குனர் பிருந்தா தேவி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தென் மாவட்டங்களை பொருத்தவரையில் சுமார் 1லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் விலை நிலங்கள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நெல் வாழை சிறு தானியங்கள் பயிரிட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது மேலும் விவசாய பெருமக்கள் தங்கள் பாதிக்கப்பட்ட வல்லினங்களுக்கு இழப்பீடு நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். துறை சார்ந்த அலுவலர்களால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.விரைவில் இழப்பீடு நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,வி.கே.புரம் நகர செயலாளர் க ணே ச ன் , நெ ல் லை வேளாண்மை இணை இயக்குனர் முருகானந்தம், துணை இயக்குனர் கிருஷ்ணகுமார், வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கிய அமல ஜெயன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் கிழக்கில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவிப்பு !

### குறிஞ்சி எஸ்.கணேசன் - ஆர்.சி.ஆசைத் தம்பி - டி.சி.வி. மணிகண்டன் தலைமையில்!

சென்னை, டிச. 25 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் தேரடி சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி. ஆசைதம்பி தலைமையிலும் பெரியார் நகரில் 8வது வட்ட செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் தலைமையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 1-ல் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையிலும் சன்னதி தெரு பெரியார் நகர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 ஆகிய இடங்களில் அமைந்துள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கும் திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், சாந்தி, பக்தன், பகுதி துணை செயலாளர்கள் எம். வி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி, பொருளாளர் ஆர்.குமரேசன், வட்ட செயலாளர்கள் த.காரத்திகேயன், எம்.எல்.சரவணன், எ ஸ் . த மி ழ் செ ல் வ ன் , குறுத்து சி.முனுசாமி, க.வீ. சத்திஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினி பாபு, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்லி, ம.ஜெயராமன், கே. கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ.அப்துல்சலிம், ப.சந்தானகிருஷ்னன், ப.அரங்கநாதன்,

சு.சந்தானம், எம்.பிரேம் குமார், சி.சரவணன், எஸ்.மூர்த்தி, பி.நந்தா, த.மகிழன், சி.உதயா, பி.பாலமுருகன், ஆர்.ஜெகநாதன், ஏ. ஜெயசீலன், ஜி.செல்வதாஸ், கு.தமிழமணி, ஜி.முனுசாமி, கா.சீனிகண்ணன், எஸ்.கன்னையன், தீபம் எஸ்.சங்கர், தீபா பி.எஸ்.தேன்மொழி, எம்.சையது அலி, சுகுந்தா முனுசாமி, குருமூர்த்தி, அ.தயாளன், முத்துகுமார், அ.அருளானந்தம், சி.டி. வீரப்பன், எம்.ராமமூர்த்தி, டி.சுரேஷ், ஆர்.சசிகுமார், சி.எஸ்.ஆர்.ஜெகன், ஆர். சின்னபாப்பா, பி.டி.சி. ஹரி, எஸ்.கதிஜாபி, வி.ஜி. எம்.சாந்தி, தாரா பாணு, ஆர்.உமாமகேஷ்வரி, எஸ். அரிகிருஷ்ணன், கே. மோகன்ராஜ், எம்.ஜெயசந்திரன் மற்றும் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# கிள்ளியூர் தெற்கில் மதநல்லிணக்க கிறிஸ்துமஸ் விழா!

### ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, டிச. 25 -

அமைச்சரும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளருமான மனோதங்கராஜ் வழிகாட்டுதலில், கிள்ளியூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கோபால் ஏற்பாட்டில் கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் மதநல்லிணக்க கிறிஸ்மஸ் விழா மாவட்ட கழக அலுவலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒன்றிய மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ்,மாவட்ட அவைதலைவர் மரியசிசுகுமார்,மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஜூட் தேவ் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கோபால் சிறப்புரை ஆற்றி தீர்மானங்களை வாசித்தார்.

தமிழ்நாட்டின் தலைநகரத்தையும் தென்மாவட்டங்களையும் உலுக்கிய பெருமழை வெள்ளத்தின் கோரப்பிடியிலிருந்து மக்களைக் காத்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை கிள்ளியூர் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் கூறிக்கொள்கிறோம். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்க கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் சார்பில் வாழ்த்துகிறோம்.

தமிழர் என்று கூறிக் கொண்டு தமிழ்நாடு முதல்வர் மீதும், கழக அரசின் மீதும் புதுடெல்லியிலிருந்து வெறுப்பை உமிழ்ந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலைமைசெயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ் கிறிஸ்மஸ் பரிசுகளை வழங்கினார்.

விழாவில் மாவட்டதுணை அமைப்பாளர் ராஜ், ஒன்றிய துணை அமைப்பாளர் துரைராஜ், பொருளாளர் தங்கதுரை, பேரூர் செயலாளர்கள் சத்தியராஜ், மனோஜ்,கான், ஜெனோ, ததேயூஸ், விவேகானந்தன் மற்றும் பேரூர், கிளை கழக நிர்வாகிகள் மகளிர்கள் பொதுமக்கள் என திரளான மக்கள் கலந்து கொண்டனர்



தாம்பரம் மாநகராட்சி, பம்மல் மண்டலம்.1, வார்டு.11 ராஜீவ் காந்தி நகர், சபாபதி நகர், பூம்புகார் நகர் காந்தி நகர், திருவள்ளுவர் தெருவில் மிக்ஜாம் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மண்டல குழு தலைவர், பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே. கருணாநிதி ஏற்பாட்டில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் நிவாரண பொருட்களை வழங்கினர். உடன் பகுதி கழக பொருளாளர் உமா சங்கர், வட்ட செயலாளர் எம்.சாலா (ஏ) சுகுமாரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன், வே.க.தன்ராஜ், ச.சுந்தர், செ.அமிர்த ராஜ், வே.க.புஷ்பராஜ், மு.சதீஷ்,என்.ஜீவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள லெட்சுமி நாராயணன் மஹாலில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஏற்பாட்டில் 2000 குடும்பங்களுக்கு 15 பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்புகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர் சாலமோன் டேவிட்,கனகராஜ், அருண்தவசுபாண்டியன், சத்தியவாணிமுத்து, துணை மேயர் ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக்குழு ஆய்வு!

### தமிழ்நாடு அரசின் திட்டப்பணிகள் திருப்தி அளிப்பதாக தகவல்!

பெரம்பலூர், டிச.25-

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழிக்குழு நேற்று ஆய்வு செய்தது. அதன்படி அக்குழுவின் தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன் தலைமையில், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராம லிங்கம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

பெரம்பலூர் ஆத்தூர் சாலையில் கோனேரிப்பாளையம் அருகே கோனேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பனையை ஆய்வு செய்து அதன் மூலம் பயன்பெறும் விளை நிலங்கள் குறித்து கேட்டறிந்தனர். அதனைத்தொடர்ந்து வேப்பந்தட்டை அரசு கலைக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை சார்பில் 100 மாணவர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள விடுதியை ஆய்வு செய்து அதன் தரம் குறித்தும் மாணவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தனர். அடுத்ததாக எறையூர் சர்க்கரை ஆலையில் முடிவுற்ற பணிகளை பார்வையிட்டு, கரும்பு அறவைத் திறன், பதிவு செய்துள்ள விவசாயிகள், இந்த ஆண்டிற்கான இலக்கு உள்ளிட்ட விவரங்களை கேட்டு அறிந்து, தேங்கியுள்ள பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டனர்.

தொடர்ந்து எறையூர் சிப்காட் தொழில் பேட்டையில் செயல்பட்டு வரும் கோத்தாரி காலனி பூங்காவினை பார்வையிட்ட, இந்த குழு பெரம்பலூர் எளம்பலூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள குற்ற பிரிவு குற்ற புலனாய்வுத்துறை அலுவலக கட்டிடத்தையும், பெரம்பலூர் பெண்கள் அரசு உயர்நிலை பள்ளியில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தையும், பெரம்பலூர் திருச்சி சாலையில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்தின் கட்டுமான பணிகளையும் பார்வையிட்டு, அதன் தரம் குறித்தும் உறுதி தன்மை குறித்தும் ஆய்வு செய்தனர்.

இதுமட்டுமின்றி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஆய்வு செய்த சட்டப்பேரவை உறுதிமொழி குழு, அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையின் தரம் குறித்தும், அங்குள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தனர். மேலும் மருத்துவமனை வளாகத்தை சுற்றிப் பார்த்த குழுவினர் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்ட வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழி குழு ஆய்வு குழு கூட்டம் நடைபெற்றது.

அதன் பிறகு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

பெரம்பலூர் மாவட்டத்தில் எட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆய்வு செய்துள்ளதாகவும், தமிழக அரசு சிறப்பாக பணிகளை மேற்கொள்வதாகவும்,

மாவட்ட ஆட்சியர் தலைமையின் சிறப்பான முறையில் பணிகள் நடந்து வருவதாகவும், அதற்காக பாராட்டுக்களையும் குழுவின் சார்பாக தெரிவிப்பதாக வேல்முருகன் தெரிவித்தார்

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சீனிவாசன், இணைச் செயலாளர் கருணாநிதி, துணைச் செயலாளர் ரவி, மாவட்ட ஆட்சியர் கற்பகம், சிறைத்துறை துணைத் தலைவர் ஜெயபாரதி பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 103 'அ' வட்டக் கழக துணைச் செயலாளர்

# டி.ஜீவா தாயார் சாமுண்டீஸ்வரி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, டிச. 25 -

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்குப் பகுதி 103 அ வட்டக் கழக துணைச் செயலாளர் டி. ஜீவாவின் தாயார் சாமுண்டீஸ்வரி அவர்கள் (வயது 75) நேற்று (24.12. 2023) மாலை 2.00 மணியளவில் இயற்கையை எழுதினார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக நிர்வா கிகள், பகுதி, வட்டச்செயலாளர்கள், நிர்வாகி கள் அணி களின் நிர்வாகிகள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (25. 12.2023) மதியம் 3 மணி அளவில் அவரது இில்லத்தில் நடைபெற்று அரும்பாக்கம் மயானத்தில் நடைபெறுகிறது.

# தமிழ்நாட்டில் மிதமான மழை பெய்யக்கூடும்!

சென்னை: டிச. 25 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய பெருங்கடல் பகுதிகளில் நேற்று நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி அதே பகுதிகளில் நிலவு கிறது. இதனால் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் நேற்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவித்திருந்தது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று முதல் வரும் 30ந்தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



மயிலாடுதுறையில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் மாநில சிறுபான்மை ஆணையத்தின் துணைத் தலைவர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் நல உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் பா.ஷா வலியுல்லா மற்றும் நிர்வாகிகள் கலந்து வழங்கினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு செ. அரங்கராசன்

### டிசம்பர் 25 (2002)



ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தூத்துக்குடியில் தந்தை பெரியார் அவர்களின் 50-வது நினைவு நாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு நேற்று அமைச்சர்கள் கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழையினால் மக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் இருக்க, திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்கள் 186 இடங்களில் நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேற்று (24.12.2023), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், முதல் சிறப்பு மருத்துவ முகாமை, திருவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா. சந்திரசேகர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில் 7-வது நாளாக தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையினர் முழு வீச்சில் நிவாரணப் பணிகள்!

# சாலைகள் - பாலங்கள் சீரமைப்பு! போக்குவரத்து தொடங்கியது!

## திருவைகுண்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

திருவைகுண்டம், டிச.25-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் ஆழ்வார்திருநகரி ஆகிய பகுதிகளில் 7வது நாளாக, மீட்புப் பணிகளை மேற்கொண்டு, நிவாரண உதவிகள், சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைக்கும் பணிகளை ஒவ்வொரு நாளும் முழுவீச்சில், துறை அதிகாரிகளுடன் களத்தில் நின்று அமைச்சர் எ.வ.வேலு செயலாற்றிக் கொண்டு வருகிறார்.

கனமழையினால் மக்களுக்கு நோய்தொற்று ஏற்படாமல் இருக்க, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்கள் 186 இடங்களில் நடத்திட, 51 மருத்தவ குழுக்கள் அமைத்து, தமிழ்நாடு அரசின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேற்று (24.12.2023), அமைச்சர் எ.வ.வேலு முதல் சிறப்பு மருத்துவ முகாமை, திருவைகுண்டம் ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார்.

அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியாதவது :

சிறப்பு மருத்துவ முகாம் மூலம் இன்று மதியம் 12.00 மணிவரை, 7,175 நபர்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது என்றும், கருங்குளம், ஆழ்வார் திருநகரி, திருவைகுண்டம் ஆகிய ஒன்றியங்களில், 87 ஊராட்சிகளில் இருக்கின்ற பாதிப்புகளை, ஊராட்சி பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**லாரிகள் மூலம் குடிநீர்!**

ஏரல் பகுதியில், குரும்பல் என்னும் இடத்தில் உள்ள பாலத்திற்குப் பதிலாக, தற்காலிக சாலை, இரண்டு நாட்களில் முழு வீச்சில் அமைக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் 112 இடங்களில், கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மின் மோட்டார் பம்புகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. தற்போது, ஊராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக, லாரிகளில் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மின்சாரப் பணிகளில், வீட்டு மின்சார இணைப்புகள், வியாபாரத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகள் மற்றும் விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகள் உள்ளது. இதில், வீட்டு மின்சார இணைப்பும், வியாபார த்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகளும் 95% சதவீதப் பணிகள் நிறைவடைந்து விட்டது. மீதமுள்ள 5% சதவீதப் பணிகள் இன்று மாலையோ அல்லது நாளையோ முடிவடையும். இப்பணிகள் முடிவடைந்தவுடன், விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சார இணைப்புப் பணிகள், மின்சார வாரிய பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

தாமிரபரணி ஆற்றின் இரண்டு பக்கமுள்ள கரைகளை உயர்த்தி கட்டுவதற்கு, முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துரைக்கப்படும்.

மேலகடம்பாகுளம் என்னும் குளத்தில் இருந்து, அனைத்து குளங்களுக்கும் தண்ணீர் இங்கிருந்தான் வழங்கப்பட்டு வருகிறது. இக்குளத்தை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள, மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களிடத்தில் எடுத்துரைக்கப்படும்.

**சாலைகள் சீரமைப்பு!**

கனமழையினால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில், அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் தூத்துக்குடி. மழை மற்றும் பேரிடர் காலங்களில் முதலில் பழுதடைவது சாலைகள்தான், அதில், திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 113 இடங்களிலும், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்களிலும், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்களிலும், நாகர்கோவிலில் 5 இடங்களிலும் சாலைகள் அடித்துச் செல்லப்பட்டு, சாலைகள் துண்டிக்கப்பட்டிருந்தது. நெடுஞ்சாலைத் துறை பணியாளர்கள், சாலை சீரமைப்புப் பணிகளை விரைவாகப் மேற்கொண்டதில், இன்று (24.12.2023) நாகர்கோயிலில் 5 இடங்களிலும், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்களிலும், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 42 இடங்களிலும் சாலை சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்து தொடங்கப்பட்டது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மீதமுள்ள 2 இடங்களில் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி நேற்று (24.12.2023) மாலைக்குள் நிறைவடைந்து, பேருந்து போக்குவரத்து தொடங்கிவிடும்.

கிராமப் பகுதிகளுக்கு சாலைகள் அமைக்கப்படும், கிராமச் சாலைகள் அலகின் மூலம், 4 தரைப்பாலங்களை, உயர்மட்டப் பாலங்களாக கோபாலபுரம், பொட்டல்ஊரணி, ஏரல், உமரிக்கோட்டம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டது. உயர்மட்டப் பாலம் கட்டும்பொழுது, மாற்றுச் சாலைகள் அமைக்கப்படுவது வழக்கம், அந்த மாற்றுச் சாலைகளும் மழைநீர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. அந்த நான்குச் சாலைகளில், 3 சாலைகள் செப்பனிடப்பட்டு, போக்குவரத்து தொடங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள ஒரு சாலையில் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி முடிந்தவுடன் போக்குவரத்து தொடங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தின் 113 சாலைகளில், 104 சாலைகள் சீரமைக்கப்பட்டு, பணிகள் நிறைவடைந்து விட்டன. மீதமுள்ள 9 சாலை சீரமைப்புப் பணிகள் இன்று (24.12.2023) மாலைக்குள் நிறைவடைந்து விடும். இன்று முதல் தூத்துக்குடி மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும்.

**போக்குவரத்து தொடங்கி விடும்!**

மேலும், பாளையங்கோட்டை - திருச்செந்தூர் செல்லும் வழித்தடத்தில், 4 இடங்களில் சாலைகள் பழுதடைந்து, சாலைகள் துண்டிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து 3 நாட்களாக முழுவீச்சில் இரவுபகல் பாராமல், தற்காலிக சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டதின் அடிப்படையில், இன்று (24.12.2023) மாலைக்குள் போக்குவரத்து தொடங்கப்படும்.

பேரிடர் காலங்களில் சாலைகள் மிகவும் பழுதடைந்து விடுகிறது. அதனை சீர்செய்யும் பொருட்டு, தற்காலிக சாலைகள் அமைத்து போக்குவரத்தை சீர்செய்வது, மற்றும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, நிரந்தரமாக சாலைப் பணிகளை மேற்கொண்டு, சாலைகள் அமைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தொடர்ந்து 7வது நாட்களாக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், அமைச்சர் அவர்களுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டுள்ளார். இந்த பேரிடர் மீட்புப் பணிகளில், தலைமைப் பொறியாளர்கள்5பேர், கண்காணிப்புப் பொறியாளர்கள்6பேர், கோட்டப் பொறியாளர்கள்10பேர், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 30பேர், உதவிப் பொறியாளர்கள்5பேர், சாலை ஆய்வாளர்கள்75பேர், பல்வேறு கோட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள்1150பேர் மற்றும் அன்றாட பணிகளுக்காக பணியாளர்கள்2000பேர் ஆகிய அனைவரையும் கொண்டும், ஜே.சி.பி. இயந்திரங்கள்106, கிட்டாச்சி இயந்திரங்கள்20, லாரிகள் 223 ஆகிய இயந்திரங்களைப் பயன்படுத்தியும், சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டதினால், பணிகளை விரைவாகவும், சிறப்பாக செய்து முடிக்க முடிந்தது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்த ஆய்வு பணிகளின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி. சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.


## கோயம்புத்தூர் மாநகராட்சி

**மத்திய மண்டலம்**

**2023-24 - 2025-26 ம் ஆண்டிற்கான மாதாந்திர உரிம இனங்களுக்கான பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ந.க.எண். 10354/2023/அ1(ம) நாள் : 20.12.2023

| | |
|---|---|
| காலம் | ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2026 வரை (நிபந்தனைகளுடன்) |
| பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாள் | 03.01.2024 |
| பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் இடம் | மத்திய மண்டல அலுவலக கருத்தரங்கு கூடம். |
| ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நேரம் | காலை 10.00 மணி முதல் காலை 11.00 மணி வரை |
| மின் ஏலம் நடைபெறும் நேரம் | காலை 11.45 மணி முதல் நண்பகல் 12.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கும் நேரம் | ❖ பிற்பகல் 2.45 மணி<br>❖ பொது ஏலம் முடிவடைந்த பின்பே ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். |
| பொது ஏலம் நடைபெறும் நேரம் | பிற்பகல் 3.00 மணி முதல் |

பொது ஏலம்/ மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஏல முன்வைப்புத் தொகையினை ரொக்கமாகவோ அல்லது **"ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி"** என்ற பெயரில் வரைவோலையாகவோ மத்திய மண்டல அலுவலக கருவூலத்தில் செலுத்தி தங்களைப் பற்றிய முழு விவரத்துடன் ஏலம் நடைபெறும் முந்தைய நாள் மாலை 5.00 மணிக்குள் மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

| வரிசை எண். | குத்தகை இனம் | கடை எண். | கடை அளவு சதுர அடி | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.83 நேரு ஸ்டேடியம் ரோடு முனுசாமி கார்டன்ஸில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகள் | 1 | 124 | 50,000/- (கடை ஒன்றுக்கு) |
| 2 | | 1A | 76 | |
| 3 | | 2 | 124 | |
| 4 | | 2A | 76 | |
| 5 | | 3 | 124 | |
| 6 | | 3 A | 76 | |
| 7 | | 4 | 124 | |
| 8 | | 4 A | 76 | |
| 9 | | 5 | 124 | |
| 10 | | 5 A | 76 | |

**நிபந்தனைகள்**

1) ஒவ்வொரு கடையும் தனித்தனி இனமாக ஏலம் விடப்படும் .
2) ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ஏதாவது ஒரு கடைக்கு வைப்புத்தொகை செலுத்தினால் போதுமானது.
3) பொது ஏலத்திற்காக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை, சம்பந்தப்பட்ட கடைக்கு உறுதி செய்யப்படாத பட்சத்தில், அதே வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வேறு கடைக்கு ஏலம் கோரலாம்.
4) ஏலத்தில் மாநகராட்சி நிர்ணயம் செய்யும் குறைந்தபட்ச வாடகை தொகைக்கு இருமடங்கு ஏலம் கோரும் நேர்வில், ஏலம் நடத்தும் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கூடுதல் வைப்புத்தொகை **ரூ.2,00,000/-ஐ** உடனடியாக ரொக்கமாகவோ/DD ஆகவோ செலுத்தப்பட வேண்டும். தொகை செலுத்திய பின்னரே ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு அனுமதிக்கப்படும்.
5) பொது ஏலம் குறித்தான நிபந்தனைகள் மத்திய மண்டல அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6) உச்சப்பட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவர்கள் ஏலம் முடிந்த மூன்று தினங்களுக்குள் ஒருவருட வாடகைத் தொகையினை வைப்புத்தொகையாகவும் மற்றும் **ரூ.20,000/-ஐ** மின் வைப்புத்தொகையாகவும் செலுத்தப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் அவரது கேள்வி தொகை ரத்து செய்யப்பட்டு பொறுப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் பொது ஏல நிபந்தனைகளின் படி மேல் நடவடிக்கை தொடரப்படும்.
7) மேற்கண்ட வைப்புத்தொகை செலுத்திய பின்னர், மன்ற அனுமதி பெறப்பட்ட பின்னரே குத்தகை உரிம ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும்.

**ஆணையாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

வெ.ஆ.எண். 665/2023/வரைகலை/ செ.ம.தொ.அ/ கோவை /நாள் : 23.12.2023


### நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசி மாவட்டங்களில்

# ரூ. 20.16 லட்சம் செலவில் 40 லட்சம் குளோரின் மாத்திரைகள் விநியோகம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

தூத்துக்குடி, டிச.25-

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக பாதிப்புக்குள்ளான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும் நீரினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரூ.20.16 இலட்சம் செலவில் 40 இலட்சம் குளோரின் மாத்திரைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளது. பொதுமக்களுக்கு குளோரின் மாத்திரைகளை விநியோகம் செய்யும் பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (24.12.2023) ஏரல் பேரூராட்சிப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீட்டிற்கு தலா 10 குளோரின் மாத்திரைகளை பொது மக்களிடம் வழங்கி, குளோரின் மாத்திரையை பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையினைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு, குடிநீர் வழங்கக்கூடிய நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பில்லாத குடிநீரை பருகுவதால் நீரினால் பரவும் நோய்களாகிய காலரா, வயிற்றுப்போக்கு போன்றவை பரவ வாய்ப்புகள் உள்ளது. இதனால் பொதுமக்கள் நன்கு கொதிக்க வைத்த குடிநீரையே பருக வேண்டும் என ஏற்கனவே பொது சுகாதாரத்துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் குளோரின் மாத்திரையைப் பயன்படுத்தி சுத்திகரிக்க ப்பட்ட பாதுகாப்பான குடிநீர் மட்டுமே குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. 500 மில்லி கிராம் எடை கொண்ட ஒரு குளோரின் மாத்திரையில் 25 மில்லி கிராம் செயலூட்டப்பட்ட குளோரின் உள்ளது. ஒரு குளோரின் மாத்திரை, ஒரு குடம் குடிநீர் அல்லது 20 லிட்டர் குடிநீரில் கலந்து பயன்படுத்த வேண்டும்.

குளோரின் மாத்திரை குடிநீரில் கலந்த பின்பு இரண்டு மணி நேரம் கழித்து அக்குடிநீரை பருக/ சமைக்க வேண்டும். குளோரின் மாத்திரையை நேரடியாக பொதுமக்கள் உட்கொள்ளக்கூடாது. குளோரின் மாத்திரை குழந்தைகள் கையில் கொடுக்கக் கூடாது. பெரியவர்களிடம் மட்டுமே வழங்கப்பட வேண்டும். குளோரின் மாத்திரைகள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறையின் களப்பணியாளர்கள் மூலமாக வீடு வீடாக சென்று ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 10 குளோரின் மாத்திரைகள் வீதம் விநியோகிக்கப்படும்.

இந்த அவசரகால செயல் முறை (Emergency Public Helath Response) ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக முறை சரிசெய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்வரை மட்டுமே பின்பற்றப்பட வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது, வணிகவரி மற்றும் பதிவுத் துறை பி.மூர்த்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), அப்துல் சமது (மணப்பாறை), ஏரல் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. சர்மிளா, இணை இயக்குநர் (தடுப்பூசிப் பணிகள்) மரு. வினைய், துணை இயக்குநர்கள் மரு.பொற்செல்வன் (தூத்துக்குடி), மரு.குமார் (கள்ளக்குறிச்சி), மரு.விஜய் (சிவகங்கை), வட்டார மருத்துவ அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில்

# புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களுக்கு 8 நாட்கள் சுற்றுலா!

## பல்வேறு மாநில பயணிகள் சென்றனர்!

சென்னை, டிச. 25 -

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத்திட்டத்தின் கீழ் புகழ்பெற்ற கோவா மந்த்ராலயம் சுற்றுலாத்தலங்களுக்கு 8 நாட்கள் பயண சுற்றுலா மேற்கொள்ளும் பயணிகள் 23.12.2023 அன்று வாலஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து TTDC சுற்றுலா பேருந்து மூலம் புறப்பட்டார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர்பெங்களூர், குற்றாலம் மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னை மாமல்லபுரம், காஞ்சிபுரம் மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவாமந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் என பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொது மக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பயண திட்டங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயங்கி வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தங்குவதற்கான அறை வசதியும், உணவு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கி பயண திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சேர்ந்தார் போல் 10க்கும் மேற்பட்ட இருக்கைகளை பதிவு செய்யும் சுற்றுலா பயணிகளுக்கு கட்டண தள்ளுபடி சலுகையும், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், போர் விதவைகள் ஆகியோருக்கு சிறப்பு கட்டண தள்ளுபடி சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (29.11.2023) அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 16 சொகுசு பேருந்துகளை கொண்டுள்ளது.

8 நாட்கள் பயணம் மேற்கொள்ளும் கோவா - மந்த்ராலயம் சுற்றுலா சென்னை சுற்றுலா வளாகத்தில் தொடங்கி அஹோபிலம், நந்தியால், மகாநந்தி, ஸ்ரீசைலம், மந்த்ராலயம், ஹம்பி - ஹாஸ்பேட், கோவா, பெங்களூர் ஆகிய இடங்களை பார்வையிட்டு சென்னை வந்தடையும்.

இந்த பயணத்திட்டத்தின் கீழ் பதிவு செய்த பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் 23.12.2023 அன்று காலை சென்னை வாலாஜா சாலையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா வளாகத்தில் இருந்து பயணத்தை தொடங்கினார்கள்.

சுற்றுலா பயணத்தின் போது சுற்றுலா வழிகாட்டி அனைத்து சுற்றுலாத் தலங்களின் சிறப்புகள் குறித்து எளிய முறையில் எடுத்துரைப்பதுடன், அவர்கள் அனைத்து சுற்றுலாத்தலங்களையும் குறித்த நேரத்தில் பார்வையிடச் செய்வார்.

சுற்றுலா பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www. ttdconline.com என்ற இணையதளத்தின் மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே முன்பதிவு செய்து சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளலாம்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள மாநகராட்சி சமுதாய கூடத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா நடைபெற்றது. முன்னாள் மாமன்ற உறுப்பினர் என்.கவிதா நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும் தாய்மார்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 500க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு புடவை, ஐந்து கிலோ அரிசி, உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாதவரம் தொகுதி பார்வையாளர் நா. சந்திரபாபு மற்றும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆகியோர் வழங்கினார்.



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவுதினத்தில் கழகப் பொருளாளர் – முன்னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி., மன்னார்குடியில் உள்ள பெரியார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞான சேகரன், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

### கனமழை: தென் மாவட்டங்களுக்கு 14 வாகனங்களில்

# ரூ.65.84 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அனுப்பி வைத்தார்!

நாமக்கல், டிச. 25 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில், வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் சார்பில் 8 குடிநீர் வாகனங்களில் 1.53 லட்சம் லிட்டர் குடிநீர் வாகனங்கள் அனுப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார் . நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இதையடுத்து கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. செய்தியாளர்களிடம் பேசுகையில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வெள்ள பாதிப்புகளை சீர் செய்திடவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வும், அமைச்சர் பெருமக்கள் நிய மிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதலாக அமைச்சர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல், மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக 21.12.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி சென்றடைந்தார். தூத்துக்குடி, மறவன் மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, வெள்ள சேத விவரங்களையும், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டறிந்து, அவர்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த சில தினங்களுக்கு முன் அதிகனமழை பெய்து வருவதை தொடர்ந்து அங்கு பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவையான ரொட்டி பாக்கெட்டுகள், தண்ணீர் பாட்டில்கள், பிஸ்கெட் பாக்கெட்டுகள், பால் பவுடர், உலர் பழங்கள், மளிகை பொருட்கள், பாய்கள், போர்வைகள், துண்டுகள், மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள், லுங்கிகள், நைட்டிகள், நேப்கின் பேடுகள் உள்ளிட்ட நிவாரண பொருட்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அதன்படி, நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் கடந்த 18.12.2023 அன்று முதல் 22.12.2023 வரை தென் மாவட்டங்களுக்கு மொத்தம் 14 கனரக வாகங்களில் ரூ.65.84 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு குடும்பத்திற்கு தேவையான 5 கிலோ அரிசி, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உப்பு, ஒரு கிலோ சர்க்கரை, 500 கிராம் கோதுமை மாவு, 500 கிராம் ரவை, 300 கிராம் மிளகாய்த்தூள், 200 கிராம் சாம்பார் பொடி, 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் ரசப் பொடி, 100 கிராம் டீத் தூள் ஆகியவை அடங்கிய நிவாரண பொருட்கள் தொகுப்பாக தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடும் பொருட்டு, நாமக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மொத்தம் 1.53 இலட்சம் லிட்டர் தண்ணீர் 8 குடிநீர் வாகனங்களில் (டேங்கர் லாரிகள்) 23.12.2023 அன்று நண்பகலுக்குள் சென்றடையும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த நிவாரண பொருட்களை முறையாக அனுப்பி வைத்திட பெரும் முயற்சி எடுத்து அதை ஒருங்கிணைத்து 14 லாரிகளில் தென் மாவட்டங்களுக்கு அனுப்ப பாடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பல்வேறு அரசுத்துறை சார்ந்த அலுவலர் பெருமக்களுக்கும், குறிப்பாக வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலக பெருமக்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மிக குறுகிய காலத்தில் ரூ.66.00 இலட்சத்திற்கும் மேலான நிவாரண பொருட்களை வழங்கி பெரும் முயற்சி எடுத்த நம் மாவட்டத்தை சேர்ந்த தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்வேறு சமூக அமைப்புகள் சார்ந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிகழ்வில் இராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் திருகுணா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் அரங்கசாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வேளாண்மை உழவர் நலத்துறை (தோட்டக்கலை துறை) மூலம் மலிவு விலையில் 70 டன் காய்கறிகள் பொதுமக்களுக்கு தினமும் வழங்கிடும் வகையில், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் இருந்து 50 வாகனங்களில் அனுப்பப்பட்டது. இதனை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வாகனங்களை அனுப்பி வைத்தார். விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி, ஆபூர்வா, அரசு வேளாண்மை நலத்துறை ஆணையர் சுப்பிரமணியன், அரசு வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண்மை விற்பனைக்குழு இயக்குனர் நடராஜன், அரசு தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை இயக்குனர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி, வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் முருகேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராமலட்சுமி கங்கா நாராயணன், நகரச் செயலாளர் பாரதி கணேசன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 வது வார்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பெட்ஷீட் ,பால், ரொட்டி, பிஸ்கட், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரன பொருட்களை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம். சாமிகண்ணு முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். உடன் பகுதி மாமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி சசிகுமார், வட்ட செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கி.நாகலிங்கம், நெல்லை முத்தையா, எச்.திவாகர் ஆர்.ஜான், எம்.பேட்ரிக், பி.வினோத்,எ. இருதயராஜ், சத்தியா, எம்.சக்திவேல், வழக்கறிஞர் சதீஷ், இரா.செல்வம், டோபிகனா சுரேஷ், தோசை சுரேஷ் எஸ். மோகன்ராஜ், ஓட்டேரி ஜெய்பால்,எம்.ராஜேஷ், எம்.அசோக், சி.வெங்கடேசன், கே.இன்பா, எம்.மனீஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத்தில் – தனியார் துறை

# வேலைவாய்ப்பு முகாம் - பணி நியமன ஆணைகள் வழங்கல்!

## செ.ஜோதிமணி எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம் - இரா.இளங்கோ - கா.சிவகாம சுந்தரி பங்கேற்பு!

கரூர். டிச.25-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கரூர் மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கரூர் தாந்தோணிமலை அரசு கலை கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டு துறை. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் இரா.இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் கா.சிவகாமசுந்தரி, ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவில் கரூர் மாவட்டத்தில் 3 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இரண்டு வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

கல்வியுடன் மற்ற போட்டித் தேர்வுக்கு தயாராக வேண்டும். இன்றைய காலத்தில் தமிழ்நாடு அரசு உங்களுக்காக முன்வந்து தொழில் துறைகளை தெரிந்து கொள்வதற்கும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்குவதற்கும் எண்ணற்ற திட்டங்களை வழி வகுத்து நடைமுறைப் படுத்தி வருகின்றது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உங்கள் சான்றிதழை பதிவு செய்து கொள் வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் அரசு வேலைக்குச் செல்லும் போது உங்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் முன்னுரிமை வழங்குவார்கள்.

இப்பொழுது உள்ள சூழ்நிலையில் போட்டி தேர்வில் மறைமுக தேர்வுக்கான பணியும், நேர்முக தேர்வுக்கான பணியும் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டத்தில் தலைமை நூலகம் இப்பொழுது தமிழ்நாட்டிலேயே முதன்மை நூலகமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது நூலகம் மாநில அளவில் பரிசு பெற்றிருக்கின்றார்கள். ஏறத்தாழ தினசரி 60க்கும் மேற்பட்டோர் போட்டித் தேர்வுக்கும், வங்கி தேர்வுக்கும், மத்திய அரசு பணிக்கும் தயாராகி வருகிறார்கள். அனைத்து துறைகளிலும் உதவியாளர்கள் முதல் மேல்நிலை அதிகாரி அளவுக்கு போட்டி தேர்வு உள்ளது.

அதேபோல் ஆசிரியர் பணிக்கும் காவல்துறை மருத்துவத்துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு போட்டித் தேர்வும் உள்ளது. தனியார் துறை நிறுவனங்கள் நமது மட்டத்திற்கு உருவாகும். அதிக காலிப்பணியிடங்கள். அதிக வாய்ப்புகள் இடம்பெற இருக்கின்றது. ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறக் கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. அப்பொழுது நிறுவனங்கள் தொடங்கும் பொழுது அனைவருக்கும் கரூர் மாவட்டத்திலே வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது என்றார்.

தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில், மொத்தம் பங்கு பெற்ற நிறுவனம் 152. இதில் மாற்றுத்திறனாளிகளுக்காக பங்கு பெற்ற நிறுவனம் 7. அரசு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து கண்காட்சி அரங்குகள் 10. திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் 3. வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட நபர்கள் 2296, பல்வேறு நிறுவனங்களில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் 593 பேர். மண்டல இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) ஆ.ஜோதிமணி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் டிடி சாந்தி, மண்டல தலைவர் எஸ்.பி.கனகராஜ் மற்றும் அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! சி.சண்முகம் ஏற்பாடு!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## குதிரை வண்டி - மாட்டு வண்டி பந்தயத்தை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை. டிச.25-

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம் அவர்களது ஏற்ப்பாட்டில்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாபெரும் மாட்டு வண்டி குதிரை வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து துவங்கி வைத்து, வெற்றி கோப்பைகள், பரிசுத்தொகை வழங்கி சிறப்பித்தார்கள்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், புதுக்கோட்டை நகர செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், ஓ.எஸ்.வெங்கடாசலம், மு.க.ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், கீரனூர் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் பி. அண்ணாத்துரை, மாவட்ட கவுன்சிலர்கள் த.செல்வம், கை. பழனிச்சாமி, குளவாய்ப்பட்டி சின்னராசு, கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம்.கே. ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முனைவர் செ.குறிஞ்சி வானன், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், மு. கலைஞர் கருணாநிதி, ஆ.ராஜேந்திர சோழன், வி.ராஜராஜ சோழன், மு.ராஜதுரை, ஆர். கே.ரெத்தினசபாபதி, வி.டி.செல்வம், எஸ். வி.ஆர்.அர்வின் ராஜா,

ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.முத்து, கோ.சின்னப்பா, கு.காத்தையா, ர.கலையரசி ரவி, ப.ராஜ்குமார், க.ரெ.கரிகாலன், சா.சின்னத்துரை, ஏ. வீரசிங்கம், கே.ஆர்.பாலமுத்து, ஆர்.சி.வி.வீரமணி, பி.சி.என்.கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனிச்சாமி, க. வீரையா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆரோக்கியசாமி, கீரனூர் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் ச.ரமேஷ், டி.கே.டி.வல்லரசு, தகவல் தொழில்நுட்ப அணி ராஜராஜன், ராஜா ராம் உள்ளிட்ட 10 கிலோமீட்டர் தூரத்திற்கு சாலைகளின் இரு புறங்களிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், பொதுமக்கள் பந்தயத்தை கண்டு ரசித்தனர். குதிரை வண்டி பந்தயம் மற்றும் மாட்டு வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்று, முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு வெற்றி கோப்பை வழங்கப்பட்டது.



இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் தொகுதி 50 வது வார்டு பனைமரத்தொட்டி பகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட 3000 பேருக்கு நிவாரணப் பொருட்கள், நலத்திட்ட உதவிகளை, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கினர். உடன் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து அணிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடுஹட்டி ஊராட்சி பெப்பேன் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமையலறை கூடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார் .உடன் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.-செ.இராமலிங்கம் எம்.பி. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# சீர்காழியில் 6783 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்

நாகை. டிச.25-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளியில் சீர்காழி பகுதியில் உள்ள மேல்நிலை முதலாமாண்டு பள்ளி மாணவ,மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.எம். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதன்மை கல்வி அலுவலர் அம்பிகாபதி வரவேற்றார். நிகழ்ச்சியில் 2941 மாணவர்கள், 3842 மாணவிகள் என 6783 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3 கோடியே 26 இலட்சம் மதிப்பிலான இலவச மிதிவண்டிகளை சுற்றுசூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்வழங்கினார்.

நிகழ்ச்சியில் திமுக மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜக.வீரபாண்டியன், ‘மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், சீர்காழி நகரச் செயலாளரும், நகர மன்ற துணைத்தலைவர் ம. சுப்பராயன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்டக் கழகப் பொருளாளர் மகா.அலெக்சாண்டர் பொதுக்குழு உறுப்பினர் எஸ் கென்னடி, ஒன்றிய கழக செயலாளர்கள் பஞ்ச்.குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி. ஜே.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா, மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர், நகர் மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் மு.மணிமேகலை, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி, கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ்,மாவட்ட ஊராட்சி தலைவர் தியாக. விஜயேஸ்வரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் முத்து.குபேந்திரன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் செல்வ முத்து சீர்காழி நகர கழக பொருளாளர் சங்கர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் நகர வாடு நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன் பேசுகையில், ஒரு காலத்தில் பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டது. ஆண்களுக்கான கல்வி மட்டுமே இருந்தது. பெண்களுக்கும் கல்வியை வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள். அதை செயல்படுத்த தொடங்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதை முழுமையாக செயல்படுத்தி காட்டியவர் நூற்றாண்டு விழாவின் நாயகர் கலைஞர் அவர்கள். அந்த காலத்தில், ஒரு பெண்ணாக முதல் டாக்டர் என்ற பெருமையை தேடி தந்தவர், டாக்டர் முத்துலெட்சுமி அவர்கள் இந்தியாவிற்கு ஒரு சாதனை பெண்மணியாக திகழ்ந்தவர்.

நமது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக திருமண உதவித்தொகை திட்டத்தை 1989ல் கொண்டு வந்தவர். 34 ஆண்டுகளுக்கு முன்னரே பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்கான திட்டத்தை தந்தவர் கலைஞர் அவர்கள். படிப்படியாக உயர்ந்து, ஆண்களுக்கு இணையாகவும், அதைத் தாண்டியும் இன்றைக்கு உயர்ந்துள்ளது. அதுபோல, பெண்களுக்கு அந்த காலத்தில் வேலைக்கு செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கும் அரசு வேலை வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர். படிப்பிலும், வேலையிலும் பெண்களுக்கென 30 சதவீத இடஒதுக்கீட்டை தந்தவர் நம் கலைஞர் அவர்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை வேண்டும், கல்வி வேண்டும், வேலை வேண்டும், இவை அத்தனையும் வழங்கியவர் நம் கலைஞர் அவர்கள். ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கியர் நம் கலைஞர் அவர்கள். அதனால் தான் இன்றைக்கு இந்தியா முழுவதும் எல்லா இடங்களிலும் பெண்கள் இன்று சென்றிருக்கின்றனர்.

நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித்துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கியுள்ளார். ரூ.40 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கி இருக்கின்றதுறைகளிலேயே அதிக நிதி ஒதுக்கி பள்ளிகல்வித்துறைக்கு மிக முக்கியத்துவம் தந்து ஏழை எளிய மாணவர்களின் கல்வியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்துள்ளார்கள். படித்தால் தான் முன்னேற முடியும் என்று நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி வருகின்றார்கள்.

இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன் என்ற அடுக்கடுக்கான திட்டத்தை கொண்டு வந்து தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தியிருக்கின்றார்கள். பதவியேற்றதிலிருந்து 31 கலை அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்திருக்கின்றார்கள். ஒரு காலத்தில் உயர்கல்வியோடு நிறுத்தும் சூழ்நிலையை மாற்றி உயர்கல்வியோடு நின்று விடக்கூடாது, கல்லூரிகளிலும் படிக்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு மாவட்டங்களிலும், கலை அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண் கல்லூரி என எல்லா இடங்களிலும் தந்தவர் நம் கலைஞர் அவர்கள் என்றால் அதை சிறப்பாக செயல்படுத்தி கொண்டிருப்பவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

கல்லூரியை முடித்து விட்டு, அதற்கு அடுத்து நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது. அந்த நிலையை மாற்றி, நான் முதல்வன் என்ற திட்டத்தை கொண்டு அவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை தந்து நீங்கள் அடுத்த கட்டத்திற்கு சென்று வாழ்வில் முன்னேற பல திட்டத்தை கொண்டு வந்தவர்.

உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கி, அதையும் நிறைவேற்றி கொண்டிருக்கின்றார்கள். இப்படி கல்விக்கு அடுக்கடுக்கான திட்டங்களை கொண்டு வந்து, கல்வியின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தியுள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் நன்மை எது தீமை எது, என அறிந்து கொள்ள பகுத்தறிவோடு இருக்க இந்த பள்ளிகள் அடித்தளமாக உள்ளது. உங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் பெண்களுக்கான உதவி எண் என்ற திட்டத்தை கொண்டு வந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பிளாஸ்டிக் பயன்பாட்டையும் நாம் முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதற்கான திட்டங்களையும் 23.12.2021 சென்னையிலே மீண்டும் மஞ்சப்பை என்ற மகத்தான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். நாம் இயற்கையை பாதுகாக்கின்ற பணியையும் செய்ய வேண்டும். இந்த இயற்கையை பாதுகாக்க வேண்டும். நல்ல கல்வியை பெற்று, உயர்பதவிக்கு செல்ல வேண்டும், அப்படி உயர் பதவிக்கு சென்ற பின்பு, ஏழை எளிய மக்களுக்கு உதவ வேண்டும். ஒரு அரசு அதிகாரியாக வர வேண்டும். அதற்கான வாய்ப்பினை நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.

### ஒன்றிய நிதி அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு ரூ.2,876 கோடி - உ.பி.க்கு ரூ. 13,088 கோடி நிதி ஒதுக்கீடு!

# தென் மாநிலங்களுக்கு பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனை ஆபத்தானது!

## “தினகரன்” தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, டிச.25–

ஒன்றிய நிதி அமைச்சகம் உட்கட்டமைப்பு நிதி ஒதுக்கீடு செய்ததில் தமிழ்நாட்டிற்கு ரூ.2,876.10 கோடியும், பா.ஜ.க. ஆளும் உ.பி. மாநிலத்திற்கு ரூ. 13,088.51 கோடியும் ஒதுக்கியுள்ளதன் மூலம் தென் மாநிலங்களுக்கு தொடர்ந்து ஓர வஞ்சனை செய்வது மிகவும் ஆபத்தானது என்று 24.12.2023 அன்று தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.



தினகரன்

இது நேரடி சாட்சியம்

அத்தலையங்கம் வருமாறு:–

ஆங்கிலப்புத்தாண்டு மற்றும் அதன் தொடர்ச்சியாக பண்டிகை நாட்கள் வரவுள்ளது. இதனை கருத்தில் கொண்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டும். இதற்காக ரூ.72,961.21 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய நிதிய மைச்சகம் தெரிவித்துள்ளது. தற்போது மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த தொகையானது, வரும் (2024) ஜனவரி 10ம்தேதி, மாநிலங்களுக்கு செலுத்த வேண்டிய வரிப்பகிர்வாகும். 28 மாநிலங்களுக்கு இந்த தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக உத்தரபிரதேச மாநிலத்திற்கு ரூ.13,088.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பீகாருக்கு ரூ.7,338.44 கோடியும், மத்திய பிரதேசத்திற்கு ரூ.5,727.44 கோடியும், மேற்கு வங்கத்திற்கு ரூ.5,488.88 கோடியும், மகாராஷ்டிராவுக்கு ரூ.4,608.96 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ.4,396.64 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆந்திராவிற்கு ரூ.2,952.74 கோடியும், கர்நாடகாவுக்கு ரூ.2,660.88 கோடியும், சத்தீஸ்கருக்கு ரூ.2,485.79 கோடியும், ஜார்கண்டிற்கு ரூ.2,142.83 கோடியும், அசாமுக்கு ரூ.2,282.24 கோடியும், தெலங்கானாவுக்கு ரூ.1,533.64 கோடியும், கேரளாவிற்கு ரூ.1,404.50 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.2,976.10 கோடி வரிப்பகிர்வு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்த நிதியானது மாநிலங்கள் செலுத்தும் வரி வருவாயில் இருந்துதான் விடுவிக்கப்படுகிறது. அதாவது மாநிலங்கள் ஒரு ரூபாய் செலுத்தினால் அதிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தொகை அந்த மாநிலங்களுக்கு திருப்பி விடுவிக்கப்படுகிறது. இதில் தென்மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு குறைவான வரி விகிதத்தையே ஒன்றிய அரசு திருப்பித் தருகிறது. அதே நேரத்தில் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் செலுத்தும் வரியை உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிகளவில் பிரித்துத் தருகிறது.

அதாவது தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய்க்கு 0.29 பைசா என்ற அளவில் வரி பகிர்வு நிதி அளிக்கப்படுகிறது.

ஆனால் உத்தரபிரதேசம் ஒரு ரூபாய் வரி செலுத்தினால் அதற்கு ரூ.2.73 என்றும், மத்திய பிரதேசத்திற்கு ரூ.2.42 என்றும், அசாமுக்கு ரூ.2.63 என்றும், பீகாருக்கு ரூ.7.06 என்றும் வரிப்பகிர்வு நிதி அளிக்கப்படுகிறது. பின்தங்கிய மாநிலங்கள் முன்னேற வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இதில் தென்மாநிலங்களுக்கு தொடர்ந்து ஓரவஞ்சனை செய்வது தான் மிகவும் ஆபத்தானது. உதாரணமாக 10வது நிதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு 6.64 சதவீதம் நிதி ஒதுக்கியது.

ஆனால் 15வது நிதி ஆணையம் இதனை 4.08 சதவீதமாக குறைத்தது. அதே சமயத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு 17.81 என்றிருந்த சதவீதம், 17.94 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் முக்கிய தூண்களில் ஒன்று கூட்டாட்சி தத்துவம். கூட்டாட்சி தத்துவத்தின் முக்கிய கூறுகளில் ஒன்று ஒன்றியமாநில அரசுகளுக்கு இடையேயான நிதி பகிர்வு. ஆனால் தற்போதைய ஒன்றிய அரசின் முறையற்ற நடவடிக்கைளில் ஒன்று மாநிலங்களின் நிதியை பறிப்பது.

இதிலும் குறிப்பாக அவர்களின் இலக்கு தென்மாநிலங்கள். இப்படி அதிக வரி வருவாயை தரும் மாநிலங்கள், பேரிடர்களில் சிக்கும்போது போதிய நிதியை தருகிறார்களா என்றால் அதுவும் ஒருதலைப்பட்சம் தான். தற்போது சென்னையின் பெரும்புயல் பாதிப்புகளுக்கும், தென்மாவட்டங்களின் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கிற்கும் தமிழ்நாடு அரசு ஆதாரங்களுடன் கேட்ட நிதி என்ன, ஆனால் ஒன்றிய நிதியமைச்சர் ஆவேசத்துடன் விடுத்துள்ள பதில் என்ன என்பதே இதற்கான நேரடி சாட்சியம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்ப ட்டுள்ளது.

### நாமக்கல் மாவட்டத்தில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்களில் 2,490 மனுக்கள் பதிவு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தகவல்!

நாமக்கல், டிச. 25 -

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் நகராட்சி வார்டு பகுதிகளுக்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி (தெற்கு), ‘‘மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமை பார்வையிட்டு பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் நாமக்கல் நகராட்சியில்



நடைபெற்று வரும் மக்களுடன் முதல்வர் முகாமை பார்வையிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் சேவைகள், திட்டங்கள், பயன்கள் அவர்களுக்கு போய் சேர வேண்டும் என்கின்ற அந்த கருத்தின் அடிப்படையில், அரசாங்கம் பொது மக்களே தேடிச் சென்று அவர்களுடைய மனுக்களை குறைகளை பெற்று தீர்வு கண்டு நடவடிக்கை எடுத்து உரியவர்களுக்கான நிவாரணத்தை தேடி தருவது தான் மக்களுடன் முதல்வர் என்கின்ற அந்த சிறப்பு திட்டமாகும்.

இச்சிறப்பு திட்டத்தில் பொதுமக்கள் அரசின் உடைய பல்வேறு துறை சார்ந்த நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள் காலதாமதம் இன்றி மக்களை விரைவாக சென்றடைய வேண்டும் என்பதே நோக்கமாகும். அந்த அடிப்படையில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமானது நாமக்கல் மாவட்டத்தில் 39 இடங்களில் நடத்தப்படும் என்று திட்டமிடப்பட்டு இது வரை 20 முகாம்கள் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது. நாமக்கல் நகராட்சி, இராசிபுரம் நகராட்சி, திருச்செங்கோடு நகராட்சி, பள்ளிபாளையம் கொமாரபாளையம் ஆகிய 5 நகராட்சிகளில் அங்கு இருக்கின்ற மக்கள் தொகை அடிப்படையில், வார்டு அடிப்படையில் பல்வேறு கட்டங்களாக மக்களுடன் முதல்வருக்கான சிறப்பு திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. மேலும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 18 பேரூராட்சிகளிலும் இந்த முகாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை நடந்த முகாம்களில் 2,490 பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு அது முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,427 மனுக்கள் நகராட்சி அளவிலும் பேரூராட்சி பகுதியில் 1063 மனுக்களும் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பெறும் மனுக்கள் பெற்று 30 நாட்களுக்குள் அவர்களுக்கு தீர்வு காணப்பட்டு அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற அந்த சேவைகள் திட்டங்கள் ஆணைகள் உரிய முறையில் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்முகாமில் ஒன்றிய செயலாளர் அசோக்குமார், நகர செயலாளர்கள் என். ஆர்.சங்கர், ராணா ஆனந்த், சிவக்குமார், செ.பூபதி, நாமக்கல் நகர்மன்ற தலைவர்கள் து.கலாநிதி, கவிதா சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் வட்டாட்சியர் நாமக்கல் சக்திவேல், பேரூர் செயலாளர்கள் தனபால், முருகேசன், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் 50வது நினைவு நாள்: திருவொற்றியூர் தளபதியார் வாசகர் வட்டம் சார்பில்

# தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## ஆர்.சி.ஆசைத்தம்பி - க.வீ.சதீஷ்குமார் மாலை அணிவித்தனர்! பி.எஸ்.சைலஸ் தலைமை!

சென்னை, டிச. 25 -

பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு,சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் நகரில் இயங்கி வரும் தளபதியார் வாசகர் வட்டம் சார்பில்,திருவொற்றியூர் பெரியார் நகரில் அமைந்துள்ள தந்தைப் பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு திருவொற்றியூர் கிழக்குப் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி. ஆசைத்தம்பி,12வது வட்ட கழக செயலாளர் லைலாண்ட் க.வீ.சதீஷ்குமார் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

தளபதியார் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் பி.எஸ்.சைலஸ் தலைமையில், துணை ஒருங்கிணைப்பாளர் தமிழ் மாறன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், ஜே.பி. சந்தானகிருஷ்ணன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ்மணி, மாவட்ட இலக்கிய அணித் தலைவர் த.மகிழன், பகுதி பிரதிநிதிகள் எ. ஜெயசீலன், சோட்டு ஜோ. ராஜ்குமார்,முன்னாள் பகுதி பிரதிநிதி ரா. கணேசன், ஏ.பி. நாகராஜ், நகர திராவிடர் கழக செயலாளர் ராஜேந்திரன், பெரு. இளங்கோ,பகுத்தறிவாளர் கழக மாவட்ட செயலாளர் ஆசைத்தம்பி, திருவொற்றியூர் ஒருங்கிணைப்பாளர் பா.சரவணகுமார், ஒளிவண்ணன், தி.க.விஜயராகவன், வழக்கறிஞர் சாகுல் ஹமீது, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தந்தைப் பெரியார் புகழ் வாழ்க! பேரறிஞர் அண்ணா புகழ் வாழ்க! நூற்றாண்டு நாயகர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் புகழ் வாழ்க! திராவிட நாயகர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலம் வாழ்க! என முழக்கமிடப்பட்டு, மக்கள் விரோத பாசிச பா.ஜ.க. அரசை வீழ்த்துவோம் வீழ்த்துவோம் என உறுதி மொழி ஏற்கப்பட்டது.



தந்தை பெரியாரின் 50 ஆவது நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர பகுதியில் உள்ள பகுத்தறிவு தந்தை பெரியார் திருவுருவ சிலைக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ் ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் , மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், பகுதி செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாந்த் , பேபி சேகர், ஜி.ராஜேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் காரணமாவும், புழல் ஏரியில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீரோடு சி.பி.சி.எல். நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆயில் கழிவுகள் கொசஸ்தலை ஆற்று பகுதியில் கலந்து வாழ்வாதாரம் இழந்து மீன்பிடிக்க செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடக்கும் திருவொற்றியூர் 1வது வட்டம் நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், முகத்துவாரக்குப்பம், எண்ணூர் குப்பத்தை சேர்ந்த 2700 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மக்களுக்கு தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கினர். கே.பி.சொக்கலிங்கம் எம்.சி., நெட்டுக்குப்பம் குமரவேல், சந்துரு, பாண்டி, கிஷோர், தாழங்குப்பம் ராஜா, சேகர், தரணி, மைதீன், மதன், ஜக் கண்ணன், எண்ணூர் குப்பம் சேகர், கமல் தாசன், பிரபு, ஜெகன், விஜயன், சீனிவாசன், வெங்கடேஷ், பாண்டியன், முகத்துவாரக் குப்பம் இளைய குமார், சுபாஷ், முத்து, மதிவாணன், சதீஷ், ராமு, தொ.மு.ச.தேசிங்கு, இளங்கோ, எஸ்.செல்வம், குமரன், எம்.தயாநிதி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், கீரப்பாக்கம் ஊராட்சி முருகமங்கலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் 339 பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஆராமுதன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இணை மேலாண்மை இயக்குனர் விஜய கார்த்திகேயன், ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் அனாமிகா ரமேஷ், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் சண்முகசுந்தரம், ஒன்றிய குழுத்தலைவர் உதயா கருணாகரன், முருகமங்கலம் ஒன்றிய கவுன்சிலர் இளங்கோ, ஊராட்சி மன்றத்தலைவர் செல்வசுந்தரி ராஜேந்திரன், நிர்வாக பொறியாளர் கூடுதல் பொறுப்பு ஜெ.இமாகுலேட் ராஜேஸ்வரி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முழுவதும் 35 டி.எஸ்.பி.க்கள் பணி இடமாற்றம்!

## டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவு!

சென்னை, டிச.25-

தமிழ்நாடு முழுவதும் 35 காவல் உதவி ஆணையர்களை பணி இடமாற்றம் செய்து காவல் துறை தலைவர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை: அடையாறு காவல் உதவி ஆணையராக இருந்த நெல்சன் தாம்பரம் உதவி ஆணையராகவும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த அருள் செல்வன் தாம்பரம் போக்குவரத்து காவல்துறை புலனாய்வு பிரிவு உதவி ஆணையராகவும், திருவள்ளூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணையத்தின் டிஎஸ்பியாக இருந்த இளங்கோவன் சென்னை திருவொற்றியூர் காவல் உதவி ஆணையராகவும், ஆவடி பட்டாபிராம் காவல் உதவி ஆணையராக இருந்த சதாசிவம் வண்ணாரப்பேட்டை காவல் உதவி ஆணையராகவும், தாம்பரம் சேலையூர் காவல் உதவி ஆணையராக இருந்த முருகேசன் சென்னை அடையாறு காவல் உதவி ஆணையராகவும், தாம்பரம் காவல் உதவி ஆணையராக இருந்த சீனிவாசன் சென்னை சைதாப்பேட்டை காவல் உதவி ஆணையராகவும், சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் உதவி ஆணையராக இருந்த மோகன் கடலூர் திட்டக்குடி டிஎஸ்பியாகவும், சென்னை சைதாப்பேட்டை காவல் உதவி ஆணையராக இருந்த கிறிஸ்டின் ஜெயசீலி தாம்பரம் சேலையூர் காவல் உதவி ஆணையராகவும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த ஜி.கே.கண்ணன் தமிழக காவல்துறை தொலைத்தொடர்பு பிரிவு டிஎஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல் காத்திருப்போர் பட்டியலில் இருந்த சுபகுமார் மதுரை நகர திடீர் நகர் காவல் உதவி ஆணையராகவும், திருப்பூர் மாவட்ட ஆவண குற்ற ஆவண காப்பக பிரிவின் டிஎஸ்பியாக இருந்த விஜயகுமார் நாமக்கல் மாவட்ட ராசிபுரம் காவல் டிஎஸ்பியாகவும், மயிலாடுதுறை மாவட்ட சீர்காழி காவல் டிஎஸ்பியாக இருந்த அகஸ்டின் ஜோசுவா லானெச் மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் டிஎஸ்பியாகவும், தேனி மாவட்ட பெரியகுளம் காவல் டிஎஸ்பியாக இருந்த கீதா தமிழக காவல்துறை சைபர் கிரைம் பிரிவு டிஎஸ்பியாகவும், திருநெல்வேலி டவுன் காவல் உதவி ஆணையராக இருந்த சுப்பையா திண்டுக்கல் மாவட்ட பழனி காவல் டிஎஸ்பியாகவும், திருநெல்வேலி நகர குற்ற ஆவண காப்பகப் பிரிவின் காவல் உதவி ஆணையராக இருந்த சரவணன் ஈரோடு மாவட்ட சத்தியமங்கலம் காவல் டிஎஸ்பியாகவும், தூத்துக் குடி மாவட்ட விளாத்தி குளம் காவல் டிஎஸ்பியாக இருந்த ஜெயச்சந்திரன் கோவை மாவட்டம் பொள்ளாச்சி காவல் டிஎஸ்பியாக வும், முதல்வர் பாதுகாப்பு பிரிவில் டிஎஸ்பியாக இருந்த கந்தவேலு சென்னை காவல்துறை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் உதவி ஆணையராக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரம் சரக காவல் பயிற்சி பிரிவு டிஎஸ்பி சுரேஷ் தமிழ்நாடு போலீஸ் அகாடமி போலீஸ் டிஎஸ்பியாகவும், நாமக்கல் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல் டிஎஸ்பியாக இருந்த சிவக்குமார் திருப்பூர் மாவட்ட அவினாசி காவல் டிஎஸ்பியாக வும், கடலூர் மாவட்ட பண்ருட்டி 10வது பட்டாலியன் உதவி கமாண்டண்டாக இருந்த சபியுல்லா கடலூர் மாவட்ட நெய்வேலி காவல் டிஎஸ்பியாகவும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தீபு திரு நெல்வேலி நகர உளவுப்பிரிவு உதவி ஆணையராகவும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த ரவிக்குமரன் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணைய பிரிவின் டிஎஸ்பியாகவும், செல்வசேகர் தாம்பரம் காவல் ஆணையரக பயிற்சி பிரிவு மையத்தின் உதவி ஆணையராக வும், ஆல்டிரின் தாம்பரம் காவல் ஆணையரக நலப்பிரிவின் உதவி ஆணையராகவும், கார்த்திக் முதல்வர் பாதுகாப்பு பிரிவு டிஎஸ்பியாகவும், அன்பரசன் தஞ்சாவூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆணைய டிஎஸ்பியாகவும், பூரணி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் டிஎஸ்பியாகவும், தையல்நாயகி கோவை மாவட்ட மின்பகிர்மான கழக விஜிலென்ஸ் பிரிவு டிஎஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தாம்பரம் மணிமங்கலம் காவல் உதவி ஆணையராக இருந்த ரவி தாம்பரம் காவல் ஆணையரக நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையராகவும், கோவை மாவட்ட பேரூர் டிஸ்பியாக இருந்த ராஜபாண்டியன் தாம்பரம் மணிமங்கலம் காவல் உதவி ஆணையராகவும், திருநெல்வேலி மாவட்ட குற்றப்பி ரிவு டிஎஸ்பியாக இருந்த தனுசியா தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும், சென்னை காவல்துறை (கிழக்கு) மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையராக இருந்த மகீமைவீரன் ஆவடி காவல் ஆணையரக மணலி காவல் உதவி ஆணையராகவும் பணியிடமாற்றம்.

மேலும், கோவை மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவு டிஎஸ்பியாக இருந்த கிருஷ்ணன் தமிழ்நாடு காவல்துறை சைபர் கிரைம் பிரிவு டிஎஸ்பியாக இருந்த உவ பிரியா, தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு டிஎஸ்பியாக இருந்த மனோகரன் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 50 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவருடைய திருஉருவச் சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டார். உடன் காஞ்சிபுரம் நாடாளு மன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள் வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### தர்மபுரி – மொரப்பூர் – சென்னை செல்லும் ரயில்வே திட்டத்திற்கு நிலம்:

# விவசாய நிலங்கள் பாதிக்காதவண்ணம் கையகப்படுத்துவீர்!

## ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் – டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் எம்.பி. கோரிக்கை மனு!

தர்மபுரி, டிச.25-

தர்மபுரி மொரப்பூர் சென்னை செல்லும் இரயில்வே திட்டத்திற்கு மூக்கனூர் மற்றும் ஏ.ரெட்டிஹல்லி கிராமங்களில் விவசாயிகளின் நிலங்கள் பாதிக்காத வண்ணம் கையகப்படுத்துக மேலும் வந்தே பாரத் ரெயிலை மொரப்பூர் ரயில் நிலையத்தில் இரண்டு நிமிடங்கள் நிறுத்த வேண்டும் என தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் ஒன்றிய ரயில்வே துறைஅவர்களை நேரில் சந்தித்து கடிதம் வழங்கி கோரிக்கை விடுத்தார்.

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி என்.வி செந்தில் குமார் ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தர்மபுரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தர்மபுரி மொரப்பூர் சென்னை செல்லும் இணைப்பு இரயில் ரயில் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கி அந்த நிலங்களுக்கு தேவையான



இழப்பீடு வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இந்த தர்மபுரி மொரப்பூர் இடையே ரயில் பாதை அமையும் இடத்தில் மூக்கனூர் மற்றும் ஏ.ரெட்டிஹல்லி ஆகிய இரு கிராமங்களில் 6000திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் மேலும் விவசாய மக்களின் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் மற்றும் வீடுகள் இந்த பாதை அமைக்கும் பகுதியில் உள்ளதால் இந்த நிலங்களை கையகப்படுத்தும் பொழுது நிலங்கள் பாதிப்பிற்கு உள்ளாகிறது.

எனவே இரயில் பாதை அமையும் இடத்திலிருந்து சுமார் 600 மீட்டர் அளவிற்கு வேறு பாதையில் இந்த ரயில் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் இந்த இரு கிராம மக்களின் விவசாயிகளின் நிலங்கள் பாதிக்காத வகையில் இந்த ரயில்வே திட்டத்தின் செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் மேலும் தருமபுரி மாவட்டம் மொரப்பூர் மற்றும் பொம்மிடி ரயில் நிலையங்களில் பொதுமக்களின் கோரிக்கையான கோவை சூப்பர் ஸ்டார் எக்ஸ்பிரஸ் கன்னியாகுமரி பெங்களூர் எக்ஸ்பிரஸ் பொம்மிடி ரயில் நிலையத்திலும் சென்னை திருவனந்தபுரம் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் கோயம்புத்தூர் திருப்பதி இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் மொரப்பூர் ரயில் நிலையத்திலும் நின்று செல்ல வேண்டும் என்றும் அதுபோல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை மொரப்பூர் ரயில் நிலையத்தில் குறைந்த பட்சம் இரண்டு நிமிடங்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் அவர்களை, செந்தில்குமார் எம்.பி. நேரில் சந்தித்து கடிதம் வழங்கி கோரிக்கை விடுத்தார்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி ஒன்றியம் அன்னமேடு ஊராட்சியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி. தேசிங்கு தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் சுனிதா பாஸ்கர் ஏற்பாட்டில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அரிசி காய்கறிகள் மளிகை பொருட்கள் வழங்கினார் அருகில் ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அன்பழகன் நிர்வாகிகள் ஜி.சுகுமார், ப.கந்தன், கட்டதொட்டி குணசேகரன், டி.மணிவண்ணன், குணாபிரவீன், இ.வி.பி.பிரதீப், எம்.உதயகுமார், தியாகு, கார்த்திக், உள்பட பலர் உள்ளனர்.

### ஏ.எம்.பவுண்டேசன் சார்பில்

# திருவொற்றியூரில் மாபெரும் மருத்துவ முகாம்!

## பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில்!

சென்னை, டிச.25-

ஏ.எம்.பவுண்டேஷன் சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி ஆகியோர் வழிகாட்டுதலில் மழை வெள்ளம் மற்றும் எண்ணெய் கழிவுகள் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற உடல் நலக்குறைவுகளை போக்குகின்ற வகையில் மருத்துவ முகாம் எண்ணூர் கத்திவாக்கத்தில் நடைபெற்றது. திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் எண்ணூர் நேரு நகர் நடுநிலைப்பள்ளியில் 231223 அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமினை திறன் வாய்ந்த மருத்துவர்களை கொண்டு ஏ.எம். பவுண்டேஷன் ஒருங்கிணைத்து, திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் சிறப்பு பொதுநல மருத்துவர்கள் மற்றும் சிறப்பு தோல் நோய் மருத்துவர்கள் பங்கேற்றனர்.

இந்த சிறப்பு வாய்ந்த மருத்துவ முகாமில் ரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு தரம் வாய்ந்த மருந்து மாத்திரைகள் வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டது.

இம்முகாமில் 500-க்கும் மேற்பட்ட பொது மக்கள் பங்கேற்று பயனடைந்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், மாவட்ட பிரதிநிதி எம். சந்திரகுமார், விளையாட்டு அணி மாவட்டத் துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், வட்ட கழக நிர்வாகிகள் கே.பாலு, ஆர். மதன்குமார், ஸ்ரீனிவாசன், சத்தியமூர்த்தி, மு.பாபு, எஸ். ராஜேஷ் பகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி, ச.வருண், சமூக வலைத்தளம் சி.முத்து, ச.தரும், ஹரி, மு.குணசீலன், தேசப்பன் விஜய்,பிரகாஷ், கிராம நிர்வாகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கு கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில், தேரடி சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையிலும் பெரியார் நகரில் 8வது வட்ட செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் தலைமையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 1–ல் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையிலும், சன்னதி தெரு பெரியார் நகர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 ஆகிய இடங்களில் அமைந்துள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கும் திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் தந்தை பெரியார் 50வது நினைவு நாளை முன்னிட்டு பேரூர் கழக செயலாளர் மு தேவராஜ் தலைமையில் பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் பேரூர் கழக நிர்வாகிகள் எஸ்.அஸ்கர் அலி, பி.சந்திரன், ஆர்.சுப்பிரமணி, எஸ்.ஏழுமலை, ஜி.வாணி, மு.க. ரவி, டி.டி. சேகர், ஏ.கமலக்கண்ணன், வீ.வீரா மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. காசிநாதன்
### டிசம்பர் 25 (1991)



**தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.**

**கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில், சென்னை வளர்ச்சிக் கழகத்தலைவர், வழக்கறிஞர் வி.ஆர்.எஸ்.சம்பத் சந்தித்து பத்தாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பை முன்னிட்டு கலைஞர் தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் செய்த பொருளாதார வளர்ச்சி மற்றும் கலைஞர் படத்திறப்பு நிகழ்ச்சியைத் தலைமையேற்று தொடங்கிவைக்குமாறு அழைப்பு விடுத்து அதற்கான அழைப்பிதழை வழங்கினார்.

வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில்

## பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது!

### தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி தகவல்!

நெல்லை,டிச.25-

வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில் பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது. நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசியில் வெள்ளத்தில் புத்தகம் இழந்தவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.

அரையாண்டு விடுமுறையை அடுத்து தலைமை ஆசிரியர்கள் மூலம் மாணவர்களை தொடர்பு கொண்டு கணக்கெடுக்கப்படுகிறது. புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளதாக தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் லியோனி தகவல் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழிகுடி ஊராட்சியில் நேற்று (24.12.2023) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியை திமுக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அரிசி, பருப்பு உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார். மக்களைச் சந்தித்து அடிப்படைத் தேவைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளை அனைத்தும் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா உள்ளிட்டோர் உடனிருந்தார்.

சுகாதாரத் திட்டங்களில்,

## செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திட அரசிடம் திட்டங்கள் உள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச.25-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 15.12.2023 அன்று மக்களவையில், சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தவும், அதனால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர், பேராசிரியர் சத்ய பால் சிங் பாகேல் அவர்களி



டம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம், டெல்லி, மற்றும் ரிஷிகேஷ் முதுகலை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகர் போன்ற சிறப்புறு மருத்துவ மையங்களில் சுகாதார திட்டங்களில், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சாட், பார்ட், பெர்ட் போன்ற செயலிகளின் வழியாக நோயாளிகளுடன் கலந்துரையாடும் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், இதன் தீய விளைவுகளை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசின் திட்டக் குழுவினால் பொறுப்புணர்ச்சியுடன் செயற்கை நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு கொள்கைகள் ஆகிய இரண்டு கொள்கை விளக்க கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், செயற்கை நுண்ணறிவின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்க, டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் 2023 நாடாளுமன்றத்தினால் ஆகஸ்ட் 2023ல் சட்டமாக்கப்பட்டுள்ளது என்றும், இதனால் ஆயுஸ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் பயனாளிகளுக்கு தனிநபர் தரவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் சத்யபால் சிங் பாகேல், பதில் அளித்துள்ளார்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கோரம்பள்ளம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டனர். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



# திராவிட மாடல் அரசு 48

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## இதோ மக்களைத் தேடிச் செல்கிறது, கோட்டை!

ஆட்சிக்கு வர வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொரு கட்சியும், ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தந்த நலத்திட்டங்களைச் செய்வோம்’ என்று வாக்குறுதிகளை தந்து தேர்தலில் வாக்கு சேகரிக்கும்.

2021 சட்டமன்றத் தேர்தலில் ஒரு புதுமை நடந்தது. நம் திராவிட முன்னேற்றக் கழகம், கொடுத்த வாக்குறுதிகளை அடுத்தடுத்து நிறைவேற்றி வருகிறது. அந்த வாக்குறுதிகளுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற்போல் இருந்தது, நம் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ எனும் சபதம்.

பிரச்சாரக் களத்திலேயே சுமார் 4 இலட்சம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார் நம் கழகத் தலைவர். 2021 மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ‘முதல்வரின் முகவரி’ எனத் தனிப் பிரிவை உருவாக்கி, அதன் மூலம் பிரச்சாரத்தின் போது பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தர விட்டார். அந்த மனுக்களில் சுமார் 90 சதவிகிதம் அளவுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய மனுக்கள் மீதும் தீர்வு நடவடிக்கைகள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு, பொறுப்பேற்ற 100 நாட்களில் மக்கள் மனம் குளிர, அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டன.

**‘மக்களிடம் செல், மக்களுடன் இணைந்து பணியாற்று’** என்ற பேரறிஞர் அண்ணா வகுத்துக் கொடுத்த பாதையில் நடைபோடும் நம் கழகத் தலைவர் அவர்கள், அண்ணாவின் வாக்கை நிறைவேற்றும் விதமாக, ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ எனும் திட்டத்தின் மூலம், தானே நேரடியாக களத்துக்குச் சென்று, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறார்.

**முதலமைச்சரின் அந்த முன்னெடுப்பில், மற்றும் ஒரு புதிய பாய்ச்சல்தான் ‘மக்களுடன் முதல்வர்’. ஆம்... முதலில் மக்கள், முதல்வரைத் தேடி வந்தார்கள். பிறகு, முதல்வர் மக்களைத் தேடிச் சென்றார். இப்போது, தான் மட்டுமல்லாது, தன்னுடன் அரசாங்கத்தையும் கைப்பிடித்து அழைத்துச் சென்று மக்கள் முன் நிறுத்துகிறார்.** அதாவது, இப்போது செயின்ட் ஜார்ஜ் கோட்டையே மக்களைத் தேடிச் சென்று சேவைகளை வழங்க உள்ளது.

### உரிய நேரத்தில், விரைவு சேவை

‘அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொரு துறையின் பொறுப்பு’ என்பது **‘கள ஆய்வில் முதலமைச்சர்’** திட்டத்தின் இலக்கு என்றால், அந்த சேவைகளைச் செழுமைப்படுத்தியும், எளிதாக மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பது **‘மக்களுடன் முதல்வர்’** திட்டத்தின் இலக்கு.

இந்தத் திட்டத்தின் கீழ், அரசிடம் தினமும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகள், சேவைகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை நிறைவேற்றி வைக்க இருக்கிறது நம் ‘திராவிட மாடல் அரசு’.

முதற்கட்டமாக, இந்தத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட உள்ளன. இரண்டாவது கட்டமாக, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளான வார்டு, கிராம ஊராட்சி அளவில் செயல்படுத்தப்பட உள்ளன.

### மாவட்டந்தோறும்... முப்பது நாட்களில்...

கடந்த டிசம்பர் 18 அன்று, கோயம்புத்தூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மழையால் பாதிப்படைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட 8 மாவட்டங்கள் தவிர, இதர 30 மாவட்டங்களில் இந்தத் திட்டம் தொடர்பாக முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வரும் 2024 ஜனவரி முதல், மீதமுள்ள அந்த மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்படும்.

இந்த 30 மாவட்டங்களில் 1,745 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்படும். ஒரு மாவட்டத்துக்கு 10 முகாம்கள் வீதம் நடைபெற உள்ளன.

ஒரு சேவையைப் பெறுவதற்கு அவ்வப்போது அரசு அலுவலகங்களுக்குச் சென்று வருவதால், மக்களுக்குக் கால விரயம், அலைச்சல், மனச்சோர்வு உண்டாகிறது. இவற்றைத் தவிர்க்கவே, மக்களின் வீடுகளுக்கு அருகிலேயே முகாம் அமைத்து, அங்கேயே ஒரு சேவையை வழங்குவதற்குத் தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் பெற்று, தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால், எளிய மக்களும், அரசின் சேவைகளை எளிதாக, விரைவாகப் பெற முடியும்.

எவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதில் இல்லை, வெற்றி... அவற்றை எந்த அளவுக்குப் பொதுமக்கள் எளிமையாக, விரைவாக அணுகும்விதத்தில் செயல்படுத்துகிறோம் என்பதில் உள்ளது உண்மையான அக்கறை. அந்த அக்கறைக்கு இன்னொரு பெயர்... ‘திராவிட மாடல் அரசு!’

...சாதனை தொடரும்

### என்ன துறைகள்... என்ன சேவைகள்...

‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ், பின்வரும் 13 அரசுத் துறைகளில், கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்பட உள்ளன.

**1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.**

பட்டா மாற்றுதல், சர்வே விண்ணப்பங்கள், ஆன்லைன் பட்டா, ஆன்லைனில் பெயர் மாற்றுதல், வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஓய்வூதியம்.

**2) ஊரக வளர்ச்சித்துறை.**

வீட்டு வரி, குடிநீர்க் குழாய் இணைப்பு, வீடு கட்டுமானத் திட்ட அனுமதி, மகளிர் மேம்பாட்டுக் கழகக் கடன்கள்.

**3) நகராட்சி நிர்வாகத்துறை.**

குடிநீர் மற்றும் சாக்கடை இணைப்புகள், பிரதம மந்திரி சிறு வணிகக் கடன், தெருவோர வியாபாரிகள் அடையாள அட்டை, புறம்போக்கு நில வரி, சொத்து வரி, தொழில் உரிமங்கள், கட்டுமான திட்ட அனுமதி, பிறப்பு, இறப்புச் சான்றிதழ், திடக் கழிவு மேலாண்மை.

**4) ஆதி திராவிடர் நலத்துறை.**

கல்வி உதவித் தொகை, வீடு கட்ட இடம், ஆன்லைன் பட்டா, தாட்கோ வங்கிக் கடன்.

**5) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகக் கடன்கள் (டாம்கோ),

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகக் கடன்கள் (டாப்செட்கோ), கல்வி உதவித் தொகை.

**6) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.**

திட்ட அனுமதி, நில வகைப்பாடு மாற்றம், தமிழ்நாடு நகர்ப்புற வீட்டு வளர்ச்சி வாரிய குடியிருப்புகள், குடியிருப்பு உரிமையாளர் ஆவணம்.

**7) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை.**

பல்வேறு தொழிலாளர் நலன் வாரியங்களில் வழங்கப்படும் சேவைகள்.

**8) கூட்டுறவுத் துறை.**

கூட்டுறவு சொசைட்டி கடன்கள்.

**9) சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் துறை.**

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்), பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்த மானியத் திட்டம் மற்றும் மாவட்ட தொழில் மையக் கடன்கள்.

**10) மாற்றுத்திறனாளிகள் நலத்துறை.**

மாற்றுத்திறனாளி அடையாள அட்டை, பராமரிப்பு உதவித் தொகை, கருவிகள், சுயதொழில் உள்ளிட்ட கடன்கள்.

**11) சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை.**

புதுமைப் பெண் திட்டம், ஆதரவற்றோருக்கு உதவும் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்.

**12) எரிசக்தித் துறை.**

புதிய மின் இணைப்புகள், கட்டண மாற்றங்கள், பெயர் மாற்றம்.

**13) காவல்துறை.**

பொருளாதாரக் குற்றம், நில அபகரிப்பு, ஏமாற்றுதல், சிறார் வன்கொடுமை மற்றும் இதர புகார்கள்.

## மகளிர் நலனில் மக்கள் அரசுகள்...

மக்கள் நல அரசுகள் என்ன செய்யும் என்பதற்கு தமிழ்நாட்டின் **‘தோழி’ விடுதி** என்கிற முன்னெடுப்பு போல, கேரளாவிலும் எடுக்கப்பட்ட முயற்சி பெரிய வெற்றி பெற்றுள்ளது.

கேரள மாநிலத்தின் கொச்சி மாநகராட்சி சார்பில், பெண்களுக்காக, பெண்களால் நடத்தப்படும் ‘ஷீ’ விடுதி (SHE LODGE) கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த முயற்சி பணி புரியும் பெண்கள் மத்தியில் வெற்றி பெற்றுள்ளது. இந்த விடுதி தொடங்கப்பட்ட 9 மாதங்களில் இதுவரை 22,500 பேர் தங்கிச் சென்றுள்ளனர்.

ஒரு நாள் இரவு தங்குவதற்கு ரூ.100 மட்டுமே வாடகை. ஒரே நேரத்தில் 160 பேர் வரை தங்கலாம். கண்காணிப்பு கேமரா, இணைய வசதி உள்பட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள இந்த விடுதியில், பத்து ரூபாய்க்கு உணவும் வழங்கப்படுகிறது. இந்த விடுதியினையும் உணவகத்தையும் கேரள அரசின் சமூக நலத்துறையான அமைப்பான குடும்பஸ்ரீ நடத்துகிறது.

12 வயதுட்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்பதால், கொச்சி வரும் பெண்களுக்கு மிகவும் குறைந்த விலையில், பாதுகாப்பான தங்குமிடமாக ’ஷீ’ விடுதி வெற்றி பெற்றுள்ளது. பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்திரச் சிந்தனைகளைப் பேணுவதில் அரசுகள் காட்டும் அக்கறையே சமூக மாற்றத்தின் வித்தாக இருக்கிறது. கேரள மாநகராட்சியின் இந்த முயற்சி திராவிட மாடல் அரசின் நீட்சியன்றி வேறென்ன?

## :ப்ளாஷ்பேக்



### பவள விழா படத்திறப்பு!

1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21, 22 தேதிகளில் மதுரையில் திராவிட இயக்கப் பவள விழா நடைபெற்றது. நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் என இயக்க முன்னோடிகளை நினைவு கூறும் வகையில், பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. கழக இளைஞர் அணி சார்பாக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநாட்டின் முதல் நிகழ்வாக கழகப் போராட்டங்களில் பங்கேற்ற தியாகிகளின் படத்தினை திறந்து வைத்தார். அப்போது அவருடன் நானும் இடம்பெற்ற நிகழ்வு இன்றைக்கு நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது.



மேகநாதன்

**-இல.மேகநாதன்,**
**தலைமைச் செயற்குழு உறுப்பினர்,**
**திருக்குவளை, நாகப்பட்டினம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### எம்.ஜி.ஆரை மீட்ட கலைஞர்!

**1989 ஆம் ஆண்டுக் கழக ஆட்சியின்போது, சென்னை தரமணியில் திரைப்பட நகரம் அமைக்க அடிக்கல் நாட்டினார் கலைஞர். அப்போது ஒன்றிய அமைச்சராக இருந்த உபேந்திராவை அழைத்துவந்து அடிக்கல் நாட்டப்பட்டது. அடுத்து ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, அந்தத் திரைப்பட நகருக்கு தனது பெயரைச் சூட்டிக் கொண்டு, திறந்து வைத்தார். கலைஞர் மீண்டும் 1996 ஆட்சியில் அமர்ந்தபோது திரைத்துறையினரின் கோரிக்கையை ஏற்றுத் தரமணி திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரைச் சூட்டினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 339




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131